விலை ரூபா: 8.00

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 28 செவ்வாய்க்கிழமை (12.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 205

ராம்கோ
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்து

# புலிகளின் கோரிக்கைக்கு அரசு பதில்

## ஜயந்த தனபால ஒப்பமிட்டு நிபந்தனைக் கடிதம்

(நமது நிருபர்)

**கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்புக்கும், திருகோணமலைக்கும் விடுதலைப் புலிகள் மாதமொரு தடவை குறிப்பிடப்பட்ட நிபந்தனையில் இராணுவப் பாதுகாப்புடன் செல்லமுடியும்.**

**விடுதலைப் புலிகள் பயணம் செய்யும் வாகனங்களில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் பிரசன்னமாகி இருப்பர். இவ்வாறு அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிற்கும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரூவ் ஹொக்லண்டுக்கும் இடையில் நேற்று விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போதே தமிழீழ விடுதலைப் புலிகளின் 14 நாள் காலக்கெடுவுக்கு அரசு சாதகமான பதிலை நிபந்தனைகளுடன் வழங்கியுள்ளது.

இச்சந்திப்பினைத் தொடர்ந்து சமாதான செயலகம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால விடுதலைப் புலிகளின்

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளுடன் தீவிரவாதிகள் தொடர்பு

## இந்தியா அச்சம்

(கொழும்பு)

நேபாளம், இந்தியா, பிரான்ஸ் பிரஞ்சுத் தீவிரவாதிகளுக்கும், விடுதலைப் புலிகளுக் தொடர்புகள் உள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

நேபாளத்தின் தீவிரவாதிகளுக்கு புலிகள் பயிற்சிகள் வழங்குகின்றனர் என தகவல்கள் வெளியாகியதை அடுத்து இந்தியப் பாதுகாப்புப் பிரிவினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அதைவிட இந்தியாவின் பல பாகங்களிலும் தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தக்கூடிய ஆபத்து நிலவுவதாக இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் இந்திய உள்விவகார அமைச்சுக்கு எச்சரித்துள்ளனர்.

(ச-6,8)

## மண்டைதீவுக் கடலில் கரையொதுங்கிய நீர்யானை

(மண்டைதீவு)

மண்டைதீவுக் கடற்பகுதியில் உயிரிழந்த நீர்யானை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் மண்டைதீவு தெற்குக் கடற்கரையில் கரையொதுங்கிய நீர்யானை கவிழ்க்கப்பட்ட பிளாஸரிக் போட்டின் நீள, அகல வடிவமைப்பில் காணப்பட்டது. இதனை ஊர்மக்கள் பலரும் சென்று பார்த்தவண்ணம் உள்ளனர். இதேவேளை மண்டைதீவு உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தியுள்ளதனால் புகைப்படக்கருவியை அங்கு கொண்டு செல்வதற்கு கடற்படையினர் தடைவிதித்துள்ளனர்.

இதனால் உயிரிழந்த நீர்யானையைப் படம்பிடிக்க முடியாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந)

## போராளிகளும் மக்களும் தாக்கப்படுவதை தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது

## சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை



வன் போர்நிறுத்தக் கண்காணிப்புக குழுவின் தலைவர் ஹக்ருப் ஹொக்லண்ட்டுக்கு கடிதம் ஒன்றினை நேற்றைய தினம் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு,

நேற்றுக் காலை 10.45 மணியளவில் திருமலை உப்புவெளிப் …

அவர்களுடனிருந்த பொதுமக்களையும் நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவத்தின்போது முக்கிய போராளி டிக்கான் உட்பட இரண்டு போராளிகளும் இரண்டு பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளதுடன், ஒருவர் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசா …

## வித்துடல்களுடன் சென்ற மக்களை தடுக்க பொலிஸார் தீவிர முயற்சி

இனந்தெரியாத ஆயுததாரிகளால் திருகோணமலையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்த போராளிகளின் வித்துடல்களுடன் நேற்று ஊர்வலமாகச் சென்ற மக்களை கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசி நேற்றுப் பொலிஸார் கலைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின்போது வீரச்சாவடைந்த போராளிகளது வித்துடல்கள் கும்புறுப்பிட்டியில் இருந்து ஏகாம்பரம் வீதியூடாக …

களை வீசி குழப்பம் விளைவிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபடமுற்பட்டனர்.

இதனையடுத்து ஊர்வலமாக வந்தோர் நகரினூடாகச் செல்லாது வேறுவழியூடாகச் சென்று திருகோணமலை முற்றவெளி பொது மைதானத்தில் பொதுக் கூட்டமொன்றை நடத்தினர்.

பின்னர் அங்கிருந்து வித்துடல்களுடன் சென்ற மக்கள் திருகோணமலை அரசியல் செயலகத்தை அடைந்தனர் இம்மாவீரர்களின் வித்துடல்கள் இன்று சம்பூரிலுள்ள …



(கிளிநொச்சி)

திருமலை உப்புவெளிப் பிரதேசத்தில் போராளிகள் தங்கியிருந்த இடத்தின்மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலானது அப்பட்டமான போர்நிறுத்த மீறல் என்று குறிப்பிட்டு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்

...து.

நேற்றுக் காலை 10.45 மணியளவில் திருமலை உப்புவெளிப் பிரதேசத்தில் எமது போராளிகள் தங்கியிருந்த இடத்தின் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. **WP** 2049 என்ற இலக்கத்தைக் கொண்ட வெள்ளை நிறமுடைய ஹயஸ் வாகனத்தில் வந்த 7 இற்கும் மேற்பட்ட ஆயுததாரித்த நபர்கள் குறிப்பிட்ட பிரதேசத்தை நோக்கி கைக்குண்டொன்றை வீசியதுடன், எமது போராளிகளையும்

...டன், ஒருவர் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் இப்போராளிகளை எச்சரித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக எமது போராளிகள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கப்பட்ட பின்னர் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்காணிப்புக் குழுவினருக்கு முறையிட்டிருந்தமை தெரிந்ததே.

வழமையான கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் அரச ஆயுத படையினர் அவ்விடத்தை விட்டு அகன்று சென்ற சிறிது நேரத்தின் பின்னர்தான் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலை நடாத்திய குறிப்பிட்ட வாகனம் சம்பவ இடத்திற்கு அருகிலிருந்த இராணுவச் சாவடியில் தங்குதடையின்றிப் பயணிப்பதற்கு இராணுவத்தினரால

(10 ஆம் பக்கம் பார்க்க)

...சாவடைந்த போராளிகளது வித்துடல்கள் கும்புறுப்பிட்டியில் இருந்து ஏகாம்பரம் வீதியூடாக ஊர்வலமாக எடுத்துவந்து நகரை அண்மித்தவேளை அப்பகுதியில் வைத்து ஊர்வலமாக வந்த மக்களை கண்ணீர்ப்புகைக் குண்டு

...அரசியல் செயலகத்தை அடைந்தனர் இம்மாவீரர்களின் வித்துடல்கள் இன்று சம்பூரிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகத்திற்கு எடுத்து வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-4)

## யாழ். குடாநாட்டில் சோகம்

திருகோணமலை செல்வநாயகபுரம் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகம் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தில் போராளிகள் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல் சம்பவத்தை அடுத்து யாழ்.குடாநாடு நேற்று சோகமயமாகக் காணப்பட்டது.

பல்வேறு பகுதிகளிலும் சோக கீதங்கள் இசைக்கப்பட்டன. வீதிகள் எங்கும் கறுப்புக்கொடிகள், வாழைகள் என்பன கட்டப்பட்டிருந்தன. இதேவேளை மக்கள் தமது சோகங்களை வெளிப்படுத்திய துடன் அஞ்சலி நிகழ்வுகளை மேற்கொள்ளவும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

## பொதுக் கட்டமைப்புக்கு எதிராக முஸ்லிம்கள் வழக்குத் தொடரமுடிவு

ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு எதிராக முஸ்லிம் கட்சிகள் வழக்குத் தொடர முடிவுசெய்துள்ளன. ஆழிப்பேரலை நிவாரண சபையின் ஊடாக முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து முஸ்லிம் அரசியல் கட்சிகள் சில உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர தயாராகி வருகின்றன.

அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் தேசிய ஐக்கிய முன்னணியும் முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர நடவடிக்கைகள் எடுத்துவருவதாக அக்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. அது தவிர அம்பாறையில் உள்ள சில முஸ்லிம் மதத் தலைவர்களும் வழக்குத் தொடரத் தீர்மானித்துள்ளனர். அடுத்த இருவாரங்களினுள் இந்த வழக்குகள் அனைத்தும் தாக்கல் செய்யப்படுமெனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. -(ச-4,8)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-234999
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்

# ஊழியர் பற்றாக்குறையால் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதார சேவைகளை நிறைவேற்ற ஊழியர்கள் பற்றாக்குறையாக இருப்பதால், இருக்கும் ஊழியர்கள் பல தரப்பட்ட சிரமங்களையும் மேலதிக வேலைப்பழுவையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைதீவு மாவட்டம் பரந்த பாரிய நிலப்பரப்பான 1100 மைல்களைக்கொண்ட ஒரு பிரதேசமாதலால் இரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவும், துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவும் இணைக்கப்பட்டதே இந்த மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவாகும்.

இங்கே பணியாற்றுகிறார் பதில் வைத்திய அதிகாரி. பொதுச்சுகாதார பரிசோதகர்கள் 6 பேர்களுக்கான ஆளணி இருக்கின்ற போதிலும் இப்பொழுது அங்கே ஒரேயொருவர் மட்டுமே கடமையாற்றுகின்றார்.

பொதுச்சுகாதார மருத்துவ மாது 14 பேர் வேலைசெய்யவேண்டிய இடத்தில் இப்பொழுது 2 பேர்கள் மட்டுமே கடமையாற்றுகிறார்கள். இப்பிரதேசத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் தேவையானவை 18. இருப்பதோ 8 நிலையங்கள் மட்டுமே. 5 நிலையங்கள் திருத்தம்செய்யப்படாமல் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்தச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு 818.3 சதுரகிலோமீற்றர் கொண்ட ஒரு பாரிய பிரதேசமாகும். அது மட்டுமல்லாமல் 10, 428 குடும்ப எண்ணிக்கையையும், 34,437 மக்கள் எண்ணிக்கையையும் தன்னகத்தே கொண்டது.

குறிப்பாக மலேரியா தடுப்பு, கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டிக்கொல்லுதல், நாய்களுக்கான தடுப்பூசி போடுதல், சுத்தமான நீர்விநியோகம், பாடசாலை சுகாதாரம் உணவு கையாளும் நிலையங்களின் சுகாதாரம் போன்ற சேவைகள் இங்கு நடைபெறுகின்றன.

இப்பிரதேசத்திலே உள்ள 31 கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய 18 பிணியாய் நிலையங்கள் மூலம் கர்ப்பவதிகள், குழந்தைகளுக்கான மருத்துவ பரிசோதனைகளை 14 மருத்துவ மாதுக்கள் செய்யவேண்டிய இடத்தில் இப்பொழுது இரண்டு பொதுச் சுகாதார மாதுக்கள் மட்டும் மாதத்தில் 23 தடவைகள் நிறைவேற்றுகின்றார்கள். இவர்களுக்கு உதவியாக 6 கிராமிய சுகாதார உதவியாளர்களும் தொண்டர்களுமே சேவையில் உள்ளனர்.

சுகாதார கல்வியைப்பொறுத்தளவில் ஒரேயொரு சுகாதார கல்வி உத்தியோகத்தரே நடத்திவருகின்றார். பாரிய ஒரு நிலப்பரப்பையும், பெருந்தொகையான மக்கள் தொகையையும்கொண்ட மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கு ஒரு நிரந்தரமான சுகாதார வைத்திய அதிகாரியையோ தேவையான பொதுச்சுகாதார உத்தியோகத்தர்களையோ, போதியளவான மருத்துவ மாதுக்களையோ வேண்டியளவான சுகாதார கல்வி உத்தியோகத்தர்களையோ அனுப்பி மிகவும் பின்தங்கிய அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத இப்பிரதேசத்தின் தேவைகளை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட திணைக்களமும் அதன் அதிகாரிகளும் முன்வரவேண்டும் எனபொதுமக்களும், பொது அமைப்புக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (து-128)

## சர்வதேச கூட்டுறவு தினவிழா

கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 83ஆவது சர்வதேச கூட்டுறவுத்தினத்தின் 3ஆம் நாள் நிகழ்வுகள் நாளை புதன்கிழமை பி.ப.1.30 மணிக்கு சங்கக் காரியாலய மண்டபத்தில்பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்புவிருந்தினர்களாக யாழ். கூட்டுறவுப்பயிற்சிக்கல்லூரி விரிவுரையாளர் இ. சுப்பிரமணியம், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் சி. சிவமகாராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் "கூட்டுறவுக் கருவூலம்" மற்றும் "கூட்டுறவுக்கோர் அறிமுகம்" என்ற இரண்டு நூல்களும் வெளியிடப்படவுள்ளன.(க.9)

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவருக்கு மெய்வல்லுநர் போட்டியில் பதக்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி கடந்த வெள்ளி சனிக்கிழமைகளில் கொழும்பு சுகததாச உள்ளரங்கு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் பதக்கங்களைப் பெற்றுள்ளார்கள்.

உயரம்பாய்தல் போட்டியில் வி.கஜிதா மூன்றாம் இடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தையும், குண்டெறிதல் போட்டியில் கே.தர்சினி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுள்ளார்கள். (19)

# தூதரக தொலைபேசி இலக்கம் செயற்படவில்லை

(கொழும்பு)

அண்மையில் லண்டனில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களில் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என லண்டனில் உள்ள இலங்கைத்தூதரகம் இன்னமும் உறுதிப்படுத்தவில்லை.

இதேவேளை, லண்டனில் உள்ள இலங்கைத்தூதரகத்திற்கு பல்வேறு தடவைகள் தொலைபேசியூடாக அழைப்புகளை ஏற்படுத்தியிருந்தாலும் எத்தகைய பதிலையும் பெறமுடியவில்லை என ஆங்கிலவார ஏடான "சண்டே ஒப்சேவர்" செய்தி வெளியிட்டுள்ளது.

பல்வேறு அழைப்புகள் எடுக்கப்பட்டிருந்தாலும் எவருமே பதிலளிக்கவில்லை. லண்டனில் உறவினர்களைக்கொண்டவர்கள் இலண்டன் தூதரகத்திற்கு எடுத்த அழைப்புகளுக்கும் எத்தகைய பதிலையும் பெறமுடியவில்லை.

இதனால் தகவல்களுக்கான பிரிட்டனின் திணைக்களத்திற்கு அழைப்பை ஏற்படுத்தியபோது பதிலளித்த ஓர் அதிகாரி, இலங்கைத் தூதரகத்திற்கு அழைப்பை ஏற்படுத்துமாறு கூறினார்.

ஆனாலும் தூதரக தொலைபேசி இலக்கங்களான 0044-2072621841/0044-2072620875 ஆகியன செயற்படவில்லை. (க-6)

# நியாப் திட்டத்தின் கீழ் வழுக்கை ஆறு புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

நியாப் II திட்டத்தின் கீழ் வழுக்கையாற்றை புனரமைப்பது தொடர்பாக முதலாவது கட்ட வேலைக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவுள்ளன.

அராலி தடுப்பணையிலிருந்து கட்டுடை வரையுள்ள பகுதியை புனரமைப்புச் செய்வதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைகளைச் செய்வது தொடர்பாக கமக்கார அமைப்புக்கள், சம்பந்தப்பட்ட நீர்ப்பாசன திணைக்களங்கள், கமநல அபிவிருத்தி திணைக்களம், விவசாய திணைக்களங்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளுடனான முக்கிய கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நாளை பி.ப. 3.00மணிக்கு உடுவில் கமநலசேவைகள் நிலையத்தில் நடைபெறவுள்ளது. (து-19)


தில்லையம்பதியாள் துணை

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

## கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பஞ்சதள இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா



அம்பிகை அடியார்களே !

நிகழும் பார்த்திப வருடம் ஆனித் திங்கள் 29ம் நாள் (13.07.2005) புதன்கிழமை பூர்வபக்க ஷஷ்டிதிதி உத்தரமும் சிங்கலக்கினமும் கூடிய சுப நேரம் காலை 7.40 மணி முதல் 8.35 மணி வரை வரும் நன் நாளில் இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற திருவருள் கை கூடியுள்ளது. அம்பிகை அடியார் பெருமக்கள் அனைவரும் கலத்து சிறப்பித்து அம்பிகையின் திருவருளைப் பெற்று ஆனந்தம் அடைவீர்களாக. அம்பிகையின்இராஜகோபுர திருப்பணி முழுமையாக நிறைவு செய்வதற்காக தங்களால் இயன்ற நிதி உதவிகளை வழங்குவதோடு தங்களின் திருக்கரங்களால் இராஜகோபுரத்துக்கான கல்லை நாட்டி கோபுரம் முழுமை பெற உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம். அடிக்கல் நாட்டு வைபவத்தை முன்னைநாள் போஷகர் திரு. கா. பொன்னையா அவர்கள் ஆரம்பித்து வைப்பார்.

இராஜகோபுர நிர்மாணிப்பு :
இந்தியா தமிழகத்தை சேர்ந்த சிற்பவல்லுனர்
திரு.செ. ஞானமூர்த்தி அவர்கள். அரச அங்கிகாரம் பெற்ற ஸ்தபதி மாமல்லபுரம்.

நிதிவழங்க விரும்புவோர்: S/A 10712 மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக கணக்கு இலக்கத்துக்கு அனுப்பவும்

தில்லையம்பதி,
கோண்டாவில்.

இராஜகோபுர திருப்பணி சபையினரும்,
திருக்கோயில் பரிபாலன சபையினரும்.

(9736) தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்

## விரைவில் மின்சாரம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு தென்னிந்திய திருச சபையில் கடந்த 3ஆம் திகதி நடை பெற்ற யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர் களுட னான கலந்துரையாடலின் போது புங்குடுதீவுக்கு விரைவில் மின் சாரம வழங்குவதாக உறுதிமொழி கூறியதையடுத்து புங்குடுதீவு பிர தேசத்தில் மின்கம்பங்கள் நடுவ தற்காக வெட்டப்பட்டு தூர்ந்து போயுள்ள கிடங்குகள் மீண்டும் தோண்டி மின் கம்பங்கள் நடப்பட்டு வருவதை அவதானிக்கக்கூடிய தாகவுள்ளது. புங்குடுதீவுக்கு மின் சாரம் வழங்கப்படாமையையிட்டு எமது வலம்புரியில் பலமுறை செய்திகள் வெளிவந்தமை தெரிந் ததே. (அ-126)

## அன்பளிப்பு

(மருதங்கேணி)

மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு லண்டனில் வசிப்பவ ரும் தும்பசெட்டி பருத்தித்துறை யைச் சேர்ந்தவருமான டாக்டர் சசி காந்தன் இரண்டுலட்சம் பெறுமதி யான பொருட்களை கடந்த வியா ழக்கிழமை ஆஸ்பத்திரி நிர்வாகத் திடம் வழங்கியுள்ளார். (அ-35)

# சேது சமுத்திரத் திட்டத்தால் இலங்கைக்கு பாதகம் ஏற்படாது

## -மத்திய கப்பல்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு

சேது சமுத்திரத்திட்டம் இலங் கைககு பாதகமாகவோ அதன் பொரு ளாதார வளர்ச்சிக்குத் தடையாகவோ இருக்காது என்று மத்திய தரைவழி மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சா டி.ஆர்.பாலு தெரி வித்துள்ளார்.

சேதுசமுத்திர கால்வாய்த் திட் டத்தால் இலங்கையின் சுற்றுச் சுழலுக்கு பாதிப்பு ஏற்படும் சாத்தி யக்கூறுகள் குறித்து இலங்கை நாடாளுமன்றத்தில் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கவலை தெரிவித்திருந்தார்.

இந்தியாவுடன் இது தொடர்பாக பேச்சுவார்த்தை மூலம் நடைபெறும் முயற்சிகள் தோல்வியடையும் பட் சத்தில் இறுதி நடவடிக்கையாக சர்வதேச நீதிமன்றத்தை அணுகு வதும் இலங்கைக்கு உள்ள வாய்ப் புக்களில் ஒன்று என அவர் கருத் துத் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து மத்திய அமைச்சா டி.ஆா.பாலு பேட்டி ஒன்றில் கருத் துத் தெரிவிக்கையில்,

இலங்கை நிபுணர்கள் இரண்டு முறை இந்தியா வந்தனர். அவர்க ளுடன் ஆலோசனை நடததி அவர் களது சந்தேகங்கள் அனைத்துக் கும் பதிலளிக்கப்பட்டது. அதன் பிறகு அப்பிரச்சினை முடிந்துவிட்ட தாகக் கருதினோம்.

சேதுகால்வாய்த திட்டம் இலங் கைக்குப் பாதகமாகவோ அதன் பொருளாதார வளர்ச்சிக்குத் தடை யாகவோ இருக்கும் என்று நாம் கருதவில்லை. இந்திய எல்லைக் குள் சேதுகால்வாய்த் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பல்வேறு நிபுணர்களின் கருத்துகளை அறிந்த பிறகே இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

இந்தியாவின் சுற்றுச்சூழலுக்கோ, இலங்கைக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படாது. இலங்கையிலிருந்து எத தனை முறை நிபுணர்கள் வந்தா லும், அவர்களுக்கு என்ன சந்தேகங் கள் இருந்தாலும் அதைத் தீர்த்து வைக்க நாம் தயாராக இருக்கிறோம்.

நட்பு நாட்டுககுப் பாதகமாக இத் திட்டத்தை இந்தியா மேற்கொள் ளாது. சர்வதேச நீதிமன்றத்துக்குச் செல்லவேண்டிய அவசியம் இருக் காது. இன்னும் சொல்லப்போனால் இத் திட்டத்தால் இலங்கையின் காஙகேசன்துறை உள்ளிட்ட துறை முகங்கள் வளர்ச்சிபெறும் என்றார்.

இதற்கிடையில், இலங்கையிலி ருந்து நிபுணர்குழு விரைவில் புது டில்லி சென்று இப் பிரச்சினை பற்றிப் பேச்சு நடத்த இருப்பதாகத் தெரியவருகிறது. (ற)

## சட்டவிரோதமானமுறையில் ஆயுதங்களை வைத்திருந்த 41பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில ஆயுதங்களை வைத்திருந்த 41 பேரை திபிலப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து 41துப்பாக கிகள் கைப்பற்றப்பட்டதாகவும் இந்தத் துப்பாக்கிகளில் சில இப் பகுதியில் இடம்பெற்ற குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டி ருப்பதாகவும் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந் துள்ளது.

இதேவேளை மக்கள் பாதுகாப் புச்சபை மற்றும் சமாதானம் தொட பான பிரதியமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் கைப்பற்றப்பட்ட 20ஆயிரத்திற்கும மேற்பட்ட துப்பாக்கிகள் கடந்த வியாழக்கிழமை சுதந்திர சதுக்கத் தில் வைத்து அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## சேதுசமுத்திரத் திட்டத்தை நிறுத்த இந்தியாவிடம் கோரமுடியாது!

### ஏ.எச்.எம். பௌசி ஆதங்கம்

(கொழும்பு)

சேதுசமுத்திர கால்வாய் திட் டத்தினால் இலங்கைக்கு ஏற்படும் சகல விதமான பாதிப்புகள் பற்றி யும் இந்திய அரசாங்கத்துடன் பேச் சுவார்த்தை ஒன்றை விரைவில் நடத்தவுள்ளதாக சுற்றாடல் மற்றும இயற்கை வள அமைச்சர் ஏ. எச். எம்.பௌசி தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரி விக்கையில்,

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ் மன் கதிர்காமர் தலைமையில் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தி னால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப் புகள் பற்றி ஆராய்வதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள் ளது.

இக்குழு இதுபற்றி ஆராயும். அத் துடன் இந்திய அதிகாரிகளை இது விடயத்தில் அடிக்கடி சந்தித்து வருகின்றோம். சேது சமுத்திரத்திட் டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் இதனை நிறுத்தும்படி எம்மால் கூறமுடியாது. எனினும், இந்தியத் தரப்பிலிருந்து சமுத்திரத் திட்டத்தினால் இலங் கைக்கு எத்தகைய பாதிப்புகளும் ஏற்படமாட்டாதென்ற உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

என்றாலும் நாம் சேது சமுத்தி ரக் கால்வாய்த் திட்டத்தின் போது இலங்கைக்கு ஏற்படும் பல்வேறு பாதிப்புகள் பற்றியும் விரிவாக ஆராய்நது வருகின்றோம். இதனடிப் படையில் சேது சமுத்திரக் கால வாய் திட்டத்தினால் இலங்கையின் எந்த பகுதிகள் எப்படி பாதிக்கும் என்ற விபரங்களை இந்திய அர சாங்கம் எம்மிடம் கேட்டிருக்கின் றது. இப் பாதிப்புகள் பற்றி இந்திய அரசாங்கத்திற்கு விளக்கம் அளிக் கப்படும்.

சேது சமுத்திரக் கால்வாய் திட டத்தினால் இலங்கையின் கடல் வளங்கள் அல்லது சுற்றுச்சூழல் மாத்திரம் பாதிப்படையாது. இலங் கையின் கப்பல் துறைக்கும் பாதிப்பு ஏற்பட பெருமளவிலான வாய்ப்பு கள் உள்ளன. அத்துடன் இலங்கை யின் கொள்கைக்கும் இது பாதிப் புகளை ஏற்படுத்தக்கூடியது.

இதுபற்றியும் நாம் இந்தியா விற்கு விளக்கியுள்ளோம். இதனால் தான் அவர்கள் சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தினால் இலங் கையின் எந்தப் பகுதிக்கு எப்படிப் பாதிப்பு வரும் என்று நாம் கூறி னால் அப்பாதிப்புகள் இலங்கைக்கு ஏற்படாமல் இருக்க தாம் நடவ டிக்கை எடுப்பதாகவும் அவர்கள் உறுதி அளித்துள்ளார்கள் என் றார். (இ-04)

## இராசி பலன்

12.07.2005
ஆனி 28, செவ்வாய்க்கிழமை
சஷ்டி பின்னிரவு 3.51 மணிவரை
உத்தரம் முழுவதும்
இராகுகாலம் 2.59 - 4.29 மணிவரை
சுபநேரம் 10.29-11.59 மணிவரை
குமார சஷ்டி விரதம், இரவு நடேசரபிசேகம்

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக் கியம், போசனசுகம், தனவருவாய். |
| இடபம் | வியாபார விருத்தி, குடும்பக் கவலை, காரிய தாமதம், அஜீரணக்கோளாறு. |
| மிதுனம் | மாதாசுகம்; மனச்சஞ்சலம், காரியதா மதம், சுபசெலவு. |
| கடகம் | கீர்த்தி, பிரயாண நன்மை, தொழில் சிந்தை, காரிய அனுகூலம். |
| சிங்கம் | அதிக செலவு, காரிய தாமதம், விவாதம், வேலைச்சுமை. |
| கன்னி | உறவினர் வருகை, புதிய முயற்சி, போசன சுகம், கற்பனை மிகுதி. |
| துலாம் | இடமாற்றம், உறவினர் வெறுப்பு, எடுத்த காரியம் தாமதமாகும், கடினவேலை. |
| விருச்சிகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், விருந்து பசாரம், உறவினர் சந்திப்பு, தனலாபம். |
| தனுசு | கடின முயற்சி, தூரதேசச் செய்தி, அதிகாரம், போசன நன்மை. |
| மகரம் | கட்டுப்பாடு, பிரயாணம், பித்தரோகம், சரீரப்பிரயாசை. |
| கும்பம் | வேலைச்சுமை, எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், அபகீர்த்தி. |
| மீனம் | குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும், உற்சாகம், பிரயாண நன்மை. |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

-வளவன்

## புகைப் பழக்கத்திலிருந்து விடுபட ஊசி மருந்து கண்டுபிடிப்பு

புகைப் பழக்கத்துக்கு அடிமையானவர்களை அப் பழக்கத்திலிருந்து மீட்க உதவும் மருந்தினை அவுஸ் திரேலிய நாட்டு மருத்துவக்குழு ஒன்று கண்டுபிடித் துள்ளது.

புகைப் பிடிக்கும் பழக்கம் கொண்ட 300பேரிடம் இம் மருந்தைச் செலுத்தி சோதனையை மேற்கொண்ட தாகவும் அச்சோதனை நல்ல பலனைத தந்ததாகவும் அம் மருத்துவக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஊசியின் மூலம் உடம்பில் செலுத் தப்படும் இம் மருந்து இரத்தத்தில் கலந்து அப்பழக் கத்தை நிறுததும் என அவுஸ்திரேலிய சுகாதாரத்துறை அதிகாரி ஹேரன் ஜோன்ஸி தெரிவித்துள்ளார்.

இத் தடுப்பு ஊசி இன்னும் ஐந்து வருடங்களில் உலக சந்தையில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-7)

## ஜனாதிபதி சீனா செல்வார்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்தமாதம் சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதியின் இவ் விஜயத்தின் போது சீனாவின் தேசிய சுற்றுலா சபைக்கும் இலங்கை சுற்றுலா சபைக்கு மிடையே ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை-சீனாவுக்கி டையே சுற்றுலாத்துறை கட்டியெழுப்பப்படும்.

ஜனாதிபதி தனது விஜயத்தின் போது சீனாவின் அரசியல் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (இ-8)

## மாணவர்களின் பெயர்களை இணையத்தில் பார்க்கலாம்

(கொழும்பு)

தேசியப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு தெரிவு செய்யப்பட்டுளள புதிய மாணவர்களின் பெயாப பட்டியலை அடுத்த வாரத்திற்குள் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்விய மைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இந்தப் பெயர்ப்பட்டியலை கல்வியமைச் சின இணையத்தளத்தில் கடந்தவாரம் வெளியிட இருந ததாகவும், எனினும் சில சிக்கல்கள் காரணமாக அந்த நடவடிக்கை தாமதமடைந்ததாகவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

தேசியப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாண வர்களை சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையில் கல்வி யமைச்சு முதற் தடவையாக நேரடியாக ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## பொதுக்கட்டமைப்புத் திருத்தத்துக்கு விடுதலைப்புலிகள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

சுனாமி நிவாரண பொதுக்கட்ட மைப்பு திருத்தங்களுககு உட்படுத் தபபடவேண்டும் என அரசாங்கம் கூறியுள்ளதால் அதனை உடனடி யாக செயற்படுத்தாமல் இழுத்தடிக கப்பட்டு வருவதாகத தெரிகிறது.

பிராநதிய நிதிதொடர்பான பிரிவு -7ஐத் திருத்த விரும்புவதாக அர சாங்கமும், ஜனாதிபதி சந்திரிகாவும நோர்வேத் தரப்பினருக்குத் தெரி வித்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி யன்று புலிகளாலும், அரசாங்கத் தினாலும் கைச்சாத்திடப்பட்ட இவ் நிவாரணசபை கட்டமைப்பு விட யத்தை பிரதமர் கடந்தவாரம் பாராளு மனறத்தில் சமர்ப்பித்திருந்தார். இதே வேளை, அரசாங்கம் வெளியிட்ட திருத்த அறிவிப்புத் தொடர்பாக நோர்வேத்தரப்பினர் புலிகளுககும், அரசாங்கத்திற்குமிடையில பேசசுக் களை மும்முரமாக நடத்தி வருகின் றனர்.

பிராந்தியங்களுககான நிதியினை பாதுகாப்பவராக பலதரப்பு பிரதி நிதிகளையும் அமாத்துவது என்றே உடன்படிக்கை கூறுகிறது.

ஆனால் தற்போது இந்நிதியின் பாதுகாவலராக திறைசேரியே இருக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித் தார். ஆனால் இதற்கு புலிகள எதிர்ப் புத் தெரிவித்துள்ளனர். (து-04)

## சாரணியர் அமைப்பை சீரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

சாரணியர் அமைப்பை சீரமைப் பதற்கான நடவடிக்கைகளை கல்வி யமைச்சு மேற்கொண்டுள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் கள் மற்றும் மாகாண கல்விப் பணிப பாளர்களுக்கு இது தொடர்பான சுற்ற றிக்கைகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதன்படி கல்விக் கல்லூரிகள் ஊடாக நியமிக்கப்பட்ட ஆசிரியர் கள் மூலம் சாரணியர்களுக்கு பயிற் சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக பாடசாலை அபவி ருததிச் சங்கங்களின் கண்காணிப் பின் கீழ் விசேட கணக்கொன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேசமயம் சாரணிய ஆசிரியா களை பயிற்றுவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் கல்வி யமைச்சு விரைவில் மேற்கொள்ள வுள்ளது. (க-9)

## இன்று ஒரு தகவல்

# சட்டமும் தண்டனையும்

ஒருவர் இருந்தார் எதற்கெடுத்தாலும் சட்டம் பேசுவார்."சட்ட நுணுக்கங்களை என் விரல் நுனியில் வைத்திருக்கிறேன்" என்பார். அதையும் எப்படிச் சொல்வார் என்றால் "பொயின்டெல்லாம் என் பிங்கர் டிப்பில் வைத்திருக்கிறேன்" என்பார். சரி அவரது விரல் நுனியில் என்ன தான் வைத்திருக்கிறார் என்று பார்த்தேன்... நகம் தான் வைத்திருந்தார். நீள நீளமாக வேறு எதுவும் என் கண்ணுக்குத் தெரியவில்லை. ஒரு வேளை அந்தக் கூரான நகத்தைத் தான் "சட்டநுணுக்கம் " என்று சொன்னாரோ?

அவர் எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் நாமெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு உண்மை என்ன தெரியுமா? சட்டம் எனக்குத் தெரியாது என்று சொன்னால் சட்டமே அதை ஏற்றுக் கொள்வதில்லை. **Ignorance of Law is not an excuse**.

லைற் இல்லாமல் சைக்கிளில் செல்கிறோம். பொலிஸ் பிடித்து நீதிமன்றில் நிறுத்தி விடுகிறார்கள். அங்கே நாம்... " விளக்கு இல்லாமல் சைக்கிளில் செல்வது தவறு என்று எனக்குத் தெரி யாது" என்று சொன்னால் அங்கே அதை ஏற்றுக்கொள்ளமாட்டார் கள். அதனால் சட்டம் எனக்குத் தெரியாது என்று சாதாரண மனிதன் கூட சொல்லமுடியாது. அதைச் சட்டம் ஏற்றுக்கொள் ளாது. சட்டத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியது நமது கடமை.

அதேபோல் தான் ஒரு குற்றத்திற்கு உடந்தையாக இருந்துவிட்டு... அந்த குற்றத்தை நான் நேரடியாகச் செய்யவில்லை.. அதனால் என்னை விட்டுவிடுங்கள் என்று சொன்னால் கேட்க மாட்டார்கள். சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை உண்டு. குற்றம் புரிவதற்கு உடந்தையாக இருந்தவர்களுக்கும் தண்டனை உண்டு.

குற்றத்திற்கு உடந்தையாக இருப்பது என்றால் என்ன? சட்டம் என்ன சொல்கிறது தெரியுமா? "ஒரு நபரை குற்றம் புரியுமாறு தூண்டுதல் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுடன் கூடி சதி செய்து அந்த சதியின் விளைவாக ஒரு சட்டவிரோதமான காரியத்தைச் செய்வது அல்லது சட்டப்படி செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் இருப்பது, வேண்டுமென்றே ஒரு குற்றச்செயல் புரிவதற்கு அல்லது சட்டப்படி செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் இருப்பதற்கு உதவி செய்வது ஆகியவற்றைக் குற்றத்திற்கு உடந்தையாக இருத்தல்" என்று சொல்கிறது.

இன்னுமொரு விடயத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். ஒரு குற்றத்திற்கு உடந்தையாக இருந்து வேறொரு குற்றம் புரியப்பட்டால் அந்தக் குற்றத்திற்கு உடந்தை யாக இருந்த வருக்கு செய்யப்பட்ட குற்றத்திற்குப் பொறுப்பு சார்வதுடன் தாமே அந்தக் குற்றம்புரிவதற்கு நேரடி உடந்தையாக இருந்த தாகவும் கொள்ளப்படும்.

அதனால் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டிது என்ன வென்றால்... விஷத்தை நேரடியாக ஒருவருக்குக் கொடுத் தாலும் ஒன்றுதான். இன்னொருவரிடம் கொடுத்துக் கொடுக்கச் சொன்னாலும் ஒன்றுதான். தண்டனையிலிருந்து தப்பிக் கொள் வதற்கு சாமர்த்தியமாக வாதாடிப் பார்க்கலாம். இருந்தாலும் சட்டம் அதை ஒத்துக்கொள்ளாது.

ஒருவன் இப்படித்தான் ஒரு தவறு செய்துவிட்டான். சாதாரண தவறு இல்லை. பெரிய குற்றம்! கொலைக் குற்றம். அதாவது ஒரு சிறுவன் தனது தாய் தந்தையரைக் கொன்றுவிட்டான். நீதி மன்றம் அவனுக்கு மரணதண்டனை விதித்தது. இறுதியாக நீதிபதி அவனைப் பார்த்து " நீ கடைசியாக உன் தரப்பினால் ஏதாவது கூற விரும்பினால் கூறு" என்றார்.

அந்தச் சிறுவன் சொன்னான் "ஐயா! நீதிபதி அவர்களே என் தாயையும் தந்தையையும் நான் தான் கொன்றேன். அப்போது ஏதோ ஒரு கோபத்தில் அப்படிச் செய்துவிட்டேன். ஆனால் இப்போது அப்பா அம்மா மீது அளவற்ற பாசம் எனக்கு உண்டாகி விட்டது. அதுமட்டுமல்ல இப்போது நான் தாய் தந்தையற்ற அநாதை.

இப்போது எந்த நேரமும் அவர்களுடைய நினைவாகவே இருக்கிறேன் அதனால் என்னை விடுதலை செய்ய வேண்டும்" என்றான். எல்லாவற்றையும் நீதிபதி பொறுமையாகக் கேட்டு விட்டார். கடைசியாக இப்படித் தீர்ப்புக் கூறினார். எப்படித் தெரியுமா?

" இந்தச் சிறுவன் குற்றத்தை ஒத்துக்கொண்டான். அதே நேரத்தில் இப்போது தனது தாய் தந்தை மீது அளவு கடந்த பாசம் வைத்திருக்கிறான். அதைத் தவிர தான் அநாதையாக இருக்கிறேன் என்ற நினைப்பு வேறு. இவற்றைக் கருணையுடன் பரிசீலனை செய்து அவனை அவனது பெற்றோரிடம் அனுப்புவது தான் நல்லது என்று அவனுக்கு மரணதண்டனை வழங்கு கிறேன்" என்றார். இவனும் பெற்றோரிடம் போய்ச் சேர்ந்தான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வடகிழக்கில் முஸ்லிம்களை ஒதுக்கி தீர்வினை ஏற்படுத்திவிட முடியாது!

## ரவூப் ஹக்கீம் உரை



(பொத்துவில்)

சர்வதேச நாடுகள் முஸ்லிம்களை சமாளித்து பொதுக்கட்டமைப்பினை முன்னகர்த்திச் செல்வதை குறியாகக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்தார்.

பொத்துவில் பகுதியில் நேற்று முன்தினம் முஸ்லிம் சமாதான செயலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இதன் பின்னர் கருத்துரைக்கும் போதே ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

பல சர்வதேச நாடுகளின் தூதுவர்களும் வதிவிடப் பிரதிநிதிகளும் என்னைக் கடந்த ஒரு சில தினங்களாக நேரடியாக சந்தித்தனர். இதன் போது பொதுக் கட்டமைப்பு சம்பந்தமாக முஸ்லிம் காங்கிரஸ் கொண்டிருக்கின்ற அதிருப்தியான மறு பரிசீலனை செய்ய வேண்டும் என அவர்கள் எம்மிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அவர்களுக்கு நாங்கள் விரிவாக நேர்மையாக எமது எதிர்ப்புக்கான அடிப்படைகள் என்ன என்று விளக்கங்களைக் கொடுத்தோம்.

முஸ்லிம் சமூகத்தை ஒரு பங்காளியாகக் கொள்ளாமல் வடகிழக்கிலே ஒரு நிர்வாகக் கட்டமைப்பினை அல்லது நிரந்தரத் தீர்வை ஏற்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று எமது நிலைப்பாட்டை விளக்கினோம். ஆனால் அவர்கள் எம்மைச் சமாளித்து விடலாமென்ற வகையில் அழுத்தங்களை எமக்கு பிரயோகித்து வருகின்றனர்.

இது யதார்த்த நிலைக்கு முரண்பாடான, வேண்டும் என்றே முஸ்லிம் சமூகத்தை சமாளித்துவிடலாம் என்ற எண்ணப்போக்கில் எங்களுக்கு மேல் வேறு தரப்புக்கள் எடுக்கின்ற நடவடிக்கையைத் திணிப்பதாக இதைப் பார்க்கின்றோம் என ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (இ-4)

# எம்மிடையே ஒற்றுமை இல்லாவிட்டால் எந்த இலக்கையும் அடைய முடியாது

## அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவிப்பு

(சம்மாந்துறை)

ஆர்ப்பாட்டங்களால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. வலிமையில்லாத் தலைமைகள் மக்களைத்



தூண்டுவதிலும் அர்த்தமில்லை. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் நாம் எந்த இடத்தில், எந்த நிலையில் இருக்கிறோம் என்ற கேள்வியே இன்று முஸ்லிம்களின் மனதில் எஞ்சியுள்ளது.

நாம் எவ்வளவோ முயற்சி செய்தும் கூட நாம் எதிர்பார்த்ததைப் பெறமுடியாத கைசேத நிலையே எமக்கு ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார். என்னதான் அழுது புரண்டாலும் எம்மிடையே ஒற்றுமை வராவிட்டால் எந்த இலக்கையும் நாம் அடைந்துவிட முடியாது என சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அபிவிருத்தி பெருவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இப்போது என்ன ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டாலும் அது ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே அமைய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஒப்பந்தங்களில் முஸ்லிம்கள் ஒரு புறமாக ஒதுக்கித் தள்ளப்பட்டனர், தள்ளப்படுகின்றனர். பொதுக்கட்டமைப்பு விடயத்தில் எதிர்க்கட்சியில் இருந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எமக்கு ஆதரவு தெரிவித்திருந்தால் இதைவிட அதிகமாக சாதித்திருக்க முடியும் என நினைக்கிறேன்.

சுனாமி ஒப்பந்தத்தில் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட அந்தஸ்து குறித்து எமக்குத் திருப்தியில்லை. இன்று சிலர் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். எல்லாம் முடிந்துவிட்ட பிறகு ஆர்ப்பாட்டம் நடத்துவதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. போராட வலிமையில்லாத தலைமைகள் மக்களைத் தூண்டிவிடுவதில் அர்த்தமில்லை எனத் தெரிவித்தார்.

அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா அங்கு உரையாற்றுகையில், முஸ்லிம் தலைமைகளை ஒன்றுபடுமாறு இங்கு பரவலாக அனைவரும் கேட்கின்றார்கள். இதன் அர்த்தம் ஒரு தலைமையின் கீழ் இருந்துகொண்டு "ஆமா" போட்டுக்கொண்டு இருக்க வேண்டும் என்பதில்லை. மாறுபட்ட கருத்துகள் இருக்கவேண்டும். அப்போது தான் மக்கள் எது சரி எது பிழை என உணர்வார்கள். ஆனால், மக்கள் நலனுக்கான திட்டத்தில் எல்லோரும் ஒன்றிணைய வேண்டும். அது தான் வெற்றிக்கான முதல் படியாக அமையும். சுனாமி ஒப்பந்தத்தில் தனித்தரப்பாக முஸ்லிம்கள் கைச்சாத்திட்டிருந்தால் இணைந்த வடகிழக்கிற்கு புலிகளின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டதாகவே அமைந்திருக்கும் எனத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் எம்.எஸ்.அமீர் அலி, அண்மைக்கால அரசியல் நகர்வுகள் முஸ்லிம்களுக்கு குறிப்பாக வடகிழக்கு முஸ்லிம்களுக்கு புதியதொரு தலைமை தேவை என்பதையே உணர்த்தியுள்ளது. அது நினைத்தவுடன் கிடைக்கப்போவதில்லை. எனினும் நாம் அதனை உணர்ந்துள்ளோம். ஆயினும் புதியதொரு தலைமையை உருவாக்க வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டால் அதனை நிறைவேற்றுவோம் எனத் தெரிவித்தார்.

பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் தனது உரையில், ரணிலால் ஒருபோதும் ஜனாதிபதியாக முடியாது. அடுத்து ஜனாதிபதித் தேர்தல் ஒன்று வந்தால் அதில் எமது ஆதரவுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே ஜனாதிபதியாவார் எனத் தெரிவித்தார். (க-4)

# ஆவணக் காப்பக தீவிபத்து

(கொழும்பு)

கடுவெல நீதிமன்ற ஆவணக் காப்பகத்தில் தீ பற்றிய சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கடுவெல மஜிஸ்திரேட் நீதிபதியின் முறைப்பாட்டின் அடிப்படையிலேயே விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. நீதிமன்ற ஆவணக் காப்பகத்தின் யன்னலும் கதவும் முதலில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளமை ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளன. மண்ணெண்ணெய் நிரம்பிய பிளாஸ்ரிக் கொள்கலனொன்று சம்பவம் நடந்த இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டதாகவும் கடுவெலப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகக் கூறிய பொலிஸார், நீதிமன்ற வளாகத்தில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரிகள் இருவர் மற்றும் காவலாளி ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (து-2)

# தென்சூடான் விடுதலைத் தலைவர் கராங் துணை அரசுத் தலைவராகப் பதவியேற்பு

(கொழும்பு)

தென்சூடான் மக்களுக்கு விடுதலை அளிக்கும் வகையில் இவர்களுக்கான சுயாதீன அரசுக்கான முதல் கட்டமாக விடுதலைத்தலைவர் ஜோன் கராங் சூடானின் துணை அரசுத்தலைவராகப் பதவியேற்றுள்ளார்.

இரு தசாப்தங்களாக தென்சூடான் மக்கள் நடத்திய விடுதலைப்போராட்டத்தை முடிவுக்குக்கொண்டு வரும் வகையில் நோர்வே அனுசரணையில் நடைபெற்ற பேச்சுக்களின் விளைவாக 6 ஆண்டு கால சுயாதீன அரசை தென்சூடான் மக்கள் விடுதலை இராணுவம் நிர்வகிக்கும் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஆறு ஆண்டுகளில் தேர்தல் ஒன்றின் வழியாக தென்சூடான் தனியாகப் பிரிந்துசெல்லும் அதிகாரத்தைப் பெறுகின்றது.

அடுத்த மாதம் தென்சூடானில் சுயாதீன அரசு அமைக்கப்படவுள்ளது.

விடுதலை அமைப்பால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த சூடான் அரசால் இதுவரை தடைசெய்யப்பட்டிருந்த தென்சூடான் தேசியக் கொடிகளை தென்சூடான் மக்கள் தம் கைகளில் ஏந்தி தமது தலைவர் பதவி ஏற்பு நிகழ்வில் வரவேற்பை வழங்கினர்.

உலகில் முடிவுக்கு வரும் முக்கிய விடுதலைப் போராட்டமாக தென்சூடான் அமைந்துள்ளது. இரு தசாப்த காலப் போராட்டத்தில் 15இலட்சம் மக்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமது தலைவரின் பதவியேற்பில் கலந்துகொண்ட தென்சூடான் மக்கள் பெரும் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். இந்தப் பதவியேற்பில் ஐ.நா. செயலாளர் கோபி அனான், தென் ஆபிரிக்க அரசுத் தலைவர் தபோ எம்பகி, அனுசரணைப் பணியில் ஈடுபட்ட நோர்வே அபிவிருத்தி அமைச்சர் ஹில்ட் ஹோன்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ர-8,4)

# புலிகளின் அலுவலகம் மீதான தாக்குதலுக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகம் மீது நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட தாக்குதலை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாக கண்டித்துள்ளது.

இது குறித்து அறிக்கையொன்றையும் ஒன்றியம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் லெப்டினன் கேணல் டிக்கான் உட்பட நான்கு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

இது ஒரு அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாகும். போராளிகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த தமிழ் மக்களால் காலக்கெடு விதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவமும் அதன் அடிவருடிகளாக செயற்படுகின்ற ஏனைய ஆயுதம் தாங்கிய குழுக்களும் எவ்வித ஆயுதமுமின்றி மக்களுக்காக வாழ்ந்து மக்களுக்காக பணிபுரிந்து கொண்டிருப்பவர்களை திட்டமிட்டு கொலை செய்திருப்பது சமாதான செயற்பாடுகளில் பற்றுறுதியுடன் இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை வலிந்து போருக்கு இழுக்கும் செயற்பாடாக இருக்கின்றது.


புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் இன்று வரை பல தமிழ்மக்களையும் போராளிகளையும் கொன்று குவித்துவரும் சிங்கள இராணுவத்தின் செயற்பாடுகளை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இந்நிலையில் தனியே போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் மட்டும் முறைப்பாடு செய்துகொண்டிருப்பதைவிட்டு எமது மக்களுக்கும் போராளிகளுக்கும் தக்க பாதுகாப்பை நீங்களே வழங்கவேண்டும் என மேன்மை தங்கிய தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களை பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வேண்டி நிற்கின்றோம்.

அத்தோடு இச் சம்பவத்தில் வீரச்சாவை தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கு எமது இதய அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம் என்றுள்ளது. (க)



## மரணத்தின் நிழலில்

ஈராக் ஜனாதிபதி சதாம் உசெனின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் சித்தரிக்கும் "சதாம் கதை" நாளைய தினத்திலிருந்து வலம்புரியில் தொடர்ந்து வெளிவரும். பிரதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.



கடந்தகால யுத்த அனர்த்தத்தால் சேதமடைந்து புனரமைக்கப்பட்ட ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலயத்தின் புதியதோற்றம். இம்மாதம் 25ஆம் திகதி புனிதரின் திருவிழா என்பது குறிப்பிடத்தக்கது. (படம் :- வி. பிரான்ஸிஸ்)

# ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அடுத்த மாதம் அறிவிக்கப்படும்?

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் எப்போதும் நடைபெறும் என்பது பற்றி தேர்தல் ஆணையாளரின் முடிவு அடுத்த மாதம் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் இந்த வருடத்திற்குள் நடைபெறுமா? இல்லையேல் அடுத்த ஆண்டு நடைபெறுமா? என்பது பற்றிய தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்கவின் முடிவு அடுத்த மாதம் அறிவிக்கப்படும் என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டாவது தடவையாக பதவியேற்ற பின் 6வருட பதவிக்காலம் இவ்வாண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் திகதியுடன் பூர்த்தியடைகின்றது. அந்தத் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரி வருகின்றது.

எனினும் அரசியலமைப்பிற்கு அமைய அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்திற்கு முன்னரே தேர்தல் நடத்தப்படவேண்டும் என அரசாங்கம் தெரிவித்து வருகிறது.

எனினும் இது பற்றி தேர்தல் ஆணையாளர் இதுவரை எந்த விதமான அறிவிப்பினையும் விடுக்கவில்லை.

எவ்வாறாயினும் அரசியலமைப்பின் படி பதவி வகிக்கும் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைய இரண்டு மாதங்கள் இருக்கையிலும் ஆனால் ஒரு மாதத்திற்கு முன்னரும் ஜனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டும்.

இதன் படி ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலம் 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகியதாகக் கருதப்பட்டால் ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 22ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் நடத்தப்படவேண்டும்.

தேர்தல் ஆணையாளர் அவ்வாறு செய்யத் தீர்மானித்தால் செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் ஜனாதிபதித்தேர்தலுக்கு வேட்பு மனுக் கோர வேண்டும்.

ஆனால் இந்த விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் என்ன நடவடிக்கை எடுப்பார் என்பது பற்றி அடுத்த மாதமளவில் அறிவிப்பாரென தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-4)

# வாழ்க்கைச் செலவுபற்றிப் பேச ஐ.தே.கவுக்கு உரிமையில்லை

## ஹெல உறுமய

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு குறித்துப் போராட்டம் நடத்த ஜாதிக ஹெல உறுமயவிற்கு உரிமை இருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அந்த உரிமை கிடையாது என ஜாதிகஹெல உறுமய கட்சியின் உறுப்பினர் பாட்லிய சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டிற்குள் ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு கோரியும் வாழ்க்கைச்செலவைக் குறைக்குமாறு வலியுறுத்தியும் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திவரும் மக்கள் போராட்டம் குறித்து கேட்கப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டிற்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எமது நிலைப்பாடும் அதுதான். வாழ்க்கைச் செலவு தற்போது அதிகரித்துள்ளது அதனையிட்டு போராட்டங்களை நடத்துவதற்கு எமக்கு உரிமை இருந்தாலும் அது பற்றி ஒரு வார்த்தையேனும் பேசுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு உரிமை இல்லை.

ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்திலும் இன்று போலவே பொருட்களின் விலையும் சேவைகளின் விலையும் அதிகரித்தே காணப்பட்டன.


இந்த விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியைப் போலவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கும் போதிய அனுபவமும் திறமையும் இல்லை ஜே.வி.பியும் இதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி தேர்தல் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றுக்காக ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறது. எனினும் இன்று நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் முக்கிய பிரச்சினை அதுவா? ஆழிப்பேரலை நிவாரணசபை குறித்து ஒரு வார்த்தை தானும் பேசாது அதற்கான மக்களின் எதிர்ப்பினை வேறு பக்கம் திசை திருப்ப ஐக்கிய தேசியக்கட்சி முயற்சிக்கிறது.

மக்கள் பேரணிக்காக ஐக்கிய தேசியக்கட்சி செலவிடும் பணத்தைக் கொண்டு ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூவாயிரம் வீடுகளை அமைத்துக் கொடுத்திருக்கலாம் என ஜாதிகஹெல உறுமயவின் உறுப்பினர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார். (க-4)













கடந்த 9,10ஆம் திகதிகளில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற நல்லூர் பிரதேச செயலக கலாசார விழாவில் கலந்துகொண்ட கலைஞர்களையும், விருந்தினர்களையும், கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை உரையாற்றுவதையும், கலைஞர்களை யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி, கலைப்பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, நல்லூர் பிரதேச செயலர் ஆகியோர் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:ஞா. ஐங்கரன்)

நிதியுதவிகளை வழங்கும் விடயத்தில்

# அமெரிக்காவின் நிலைப்பாடு புரியாத புதிராக உள்ளது!

## கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

'பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை விடுதலைப்புலிகளுடன் செய்யபபட்டிருப்பதால அதற்கு நிதிவசதிகளை அளிக்க முடியாது'எனறு அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

இது தொடர்பான அதிகாரபூர்வமான அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன என்பது புரிந்துகொள்ளமுடியாத புதிராக இருக்கின்றது எனத தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சண்டேலீடர் பத்திரிகைக்கு அளித்த செவ்வியின் போது தெரிவித்துள்ளார்.

அண்மையில் இங்கு வந்த போது செய்தியாளர் மகாநாடு ஒன்றை நடத்திய அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர்,

முடங்கிக்கிடக்கும் சமாதானப் பேச்சுக்களைத தொடர்ந்து முன்னெடுப்பதற்கு பொதுக்கடடமைப்பு மிகவும் அவசியமானது என்று தெரிவத்தார். சண்டையிலீடுபட்டிருந்த இருதரப்பினரும் இணைந்து செயற்படுவதற்கு இந்த பொதுக்கட்டமைப்பு இன்றியமையாதது என்பதை அவர் அமெரிக்க பாராளுமனற குழுவுக்கும் வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் பின்னர் பொதுக்கட்டமைப்புக்கு நிதி வசதியளிக்கமுடியாது என்று அமெரிக்கா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இதுபற்றி எதுவும் புரியமுடியாதுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்ட போதும் அதன் அமுலாக்கம் தொடர்பில் எதுவும் இதுவரை நடைபெறவில்லை.

நிதி வழங்கும் நாடுகளின் அழுத்தம் காரணமாகவே ஜனாதிபதி ஒப்பமிடும் நடவடிக்கையை முன்னெடுத்தாரேயன்றி இனப்பிரச்சினைத் தீர்வை முன்னெடுக்கும் உண்மையான உள்நோக்கத்துடன் நடந்திருக்கவில்லை.

பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கம் தடைப்படுமானால் நிலைமை மோசமடையலாம். மனிதாபிமான உதவிகளுக்கான கட்டமைப்புக்கே இத்தனை பின்னடிப்புகள் ஏற்படுமாயின் சமஷ்டி சுயநிர்ணய உரிமை என்பவற்றை எதிர்பார்க்க முடியாது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, சுனாமி நிவாரணப் பணிகளுக்கான கட்டமைப்புக்கூடாக நிதியுதவிகளை வழங்குவதில்லை என்ற அமெரிக்காவின் முடிவு பலதரப்பினரையும் அதிர்ச்சிகுள்ளாக்கியிருக்கின்றது. குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட பெயர் குறிப்பிட விரும்பாத தமிழத் தேசியக் கூட்டமைப்பின் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர்,

இது அமெரிக்காவின் முன்னைய நிலைப்பாட்டுக்கு மாறான ஒன்று என்று கண்டனம் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் சுனாமி நிவாரணப பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திவந்த அமெரிக்கா, இந்தக் கட்டமைப்புக்கூடாக நிதி வழங்கமுடியாது என்று தெரிவிப்பது இந்தக் கட்டமைப்பை இயங்காமல் செய்துவிடக்கூடிய ஒரு ஆபத்தான முடிவு என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்காவின் இந்த முடிவு குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைத் தூதுவர் சுசானா பிளங்கார்ட்டும் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் இந்த முடிவு ஏனைய நாடுகளுக்கும் ஒரு நெருக்கடியை ஏற்படுத்துவதாக அமைவதாகவும் அவர் மேலும் இதுபற்றிக் கருத்து வெளியிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், பொதுக்கட்டமைப்புக் கூடாக நிதியுதவிகளை வழங்கமுடியாது என்று தெரிவித்த அதே தினத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டட் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6,4)

## மின்விநியோக நடவடிக்கை

தென்மராட்சி கப்பதுர் கிராமத்திற்கான மின் விநியோகப் பணிக்காக சாவகச்சேரி மின்சார சபையால் உயர் அழுத்த மின் விநியோகத்திற்கான மின் தூண்கள் கப்பதுர் வரை நாட்டப்பட்டதோடு சாசனை வடக்கு வரையில் கேபிள்கள் பொருத்தப்பட்டு தினமும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (து-21)

## கைக்குண்டு வீச்சு

(திருகோணமலை)

திருகோணமலை சிங்கநகரி பிரதேசத்தில இராணுவப் பொலிஸ் நிலையமொன்றின் மீது நேற்றுமுன்தினம் இனந்தெரியாதோர் கைக்குண்டொன்றை வீசியுள்ளனர்.

இக்கைக்குண்டுவீச்சுத் தாக்குதலின் போது இராணுவச் சிப்பாயொருவர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்களே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (க-4)

# ஜனாதிபதி தேர்தலை யாப்புக்கு உட்பட்டே நடத்த வேண்டும்

## ஐ.தே.க தலைவர் ரணில்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நடைமுறையில உள்ள 'அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடாத்த வேண்டுமென்று எதிாக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள் சக்தியின் நேற்றைய பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற எந்தவொரு தேர்தலையும் நினைத்தபடி நடாத்தமுடியாது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தான் நினைத்தவாறு தனது சுயநலத்திற்காக ஜனாதிபதி தேர்தலை நடாத்த முறபடுகின்றார். நாடடில் சட்டங்கள் உண்டு. ஜனாதிபதி தேர்தலை நடாத்தவும் 1978 ஆம் ஆண்டு அரசமைப்பில் சட்டம் உண்டு.

அவ் அரசமைப்பை பின்பற்றியே ஜனாதிபதித் தேர்தலை நடாத்த வேண்டும. ஜனாதிபதி தான் நினைத்தவாறு ஜனாதிபதித் தேர்தலை நடாத்த முறபட்டால் ஐக்கிய தேசியக் கட்சி தனது எதிர்ப்பினை காட்டும்.

ஜனாதிபதி தேர்தலை நடாத்தி மக்களின வாக்குரிமை பறிக்க எவருக்கும உரிமையிலலை என ரணில் மேலும் தெரிவித்தார். (இ-8)

# சகல விதமான குழப்பங்களுக்கும் ஜே.வி.பியினரே முழுப்பொறுப்பு

(கொழும்பு)

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள சகல விதமான குழப்பங்களுக்கும் ஜே.வி.பியினரே முழுப் பொறுப்பும் ஏற்கவேண்டும். இதனால் அவர்களுடன் எதிர்காலத்தில் எத்தகையதொரு உடன்படிக்கையையும் ஏற்படுத்த நான் தயார் இல்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்தவாரம் இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் கூறியுள்ளார்.

ஜே.வி.யினரை மீண்டும் சேர்த்துக் கொள்வது அவசியம் என பிரதியமைச்சர்கள பலா பேசியபோதே ஜனாதிபதி மேற்கணடவாறு தெரிவித்தா. ஐக்கிய தேசியக் கட்சி கூட்டு அரசாங்கத்தைப பதவி கவிழ்ப்பதற்கு 3 அமைச்சுக்களையும் பொறுப்பேற்குமாறு ஜே.வி.யும் எமது கட்சி உறுப்பினர்கள் சிலரும் என்னை வற்புறுத்தியிருந்தனர் என்றார்.

மேலும் மேல்மாகாண சபை விடயத்தில ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவைப் பெறுவதை மக்கள் விரும்புகிறார்கள் எனவும் ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை, கிராமங்களினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அக்கட்சி தனது சின்னமான கை சின்னத்தில் தான் போட்டியிட வேண்டும் என்றும், தேர்தலில் தாம் வெற்றி பெறுவோம் என்றும் கூறினர். ஜனாதிபதியும் தனித்துப போட்டியிடுவதில் ஆர்வமாக உளளார் என தெரிவிக்கப்படுகிறது. (க-6)

# மின் பாவனையாளர் புகார்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் புதிதாக மின் விநியோகத்தினை பெற்றுக்கொள்வோருக்கு மின் அலகு அளவீட்டுமானி பொருத்தப்படாமையினால் அவர்கள் மேலதிக மினகட்டணத்தைச் செலுத்த வேண்டியுள்ளதாக அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

மின் அலகு அளவீட்டுமானிகள் பொருத்தப்பட்ட வடுகளில் இரண்டு மூன்று மின் குமிழ்களை எரிய விடுவோர் மாதாந்தம் எழுபத்தைந்து முதல் நூற்றைம்பது வரை கட்டணம் செலுத்தும் போது அதேபோன்று குறைந்த மின்குமிழ்களை எரியவிடும் புதிய மின் பாவனையாளர்களுக்கு மாதாந்தம் 300 ரூபா போன்ற ஒரு நிலையான கட்டணத்தினை விதிப்பதன்மூலம் தமக்கு இருமடங்கு சுமையினை மின்சாரசபை ஏற்படுத்துவதாகவும் அதிகாரிகள் இதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பாதிக்கப்படுபவர்கள் தெரிவிக்கின்றார்கள். (து-21)

# அரங்கச் செயற்பாட்டுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களை ஆற்றுப் படுத்தும் நோக்கில் அரங்கச் செயற்பாட்டுடன் கூடிய பல கருத்தரங்குகளை சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளான கறகோவளம், பருத்தித்துறை, தும்பளை கிழக்கு, தும்பளை மேற்கு, பருத்தித்துறை விஞ்ச அம்மன் கோவிலடி போன்ற பகுதிகளில் ஏற்கனவே நடாத்தியுள்ளது. இத்தொடரின் அடுத்த நிகழ்வாக சுப்பர்மடம மீனவர் சமாஜத்துடன் இணைந்து இன்னொரு அரங்கச் செயற்பாட்டு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை செயற்படுத்தப்படவுள்ளது.

இந் நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன, பருத்தித்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர், வட இந்து அதிபர் திருமதி சீதா சண்முகநாதன், சுப்பர்மடம் மீனவர் சமாஜம் பாஸ்கர் யசோதா, பாலசுப்பிரமணியம் பாலவதனி ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கவுள்ளனர். (து)

## வீதி நாடகம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் சுகாதார விழிப்புட்டுவதற்காக ஒக்ஸ்பாம் நிறுவனத்தினால் வதி நாடகங்களும் கூட்டங்களும் நடாத்தபபட்டு வருகின்றன.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் ஒவ்வொரு முகாம்களிலும் இந்த விழிப்பூட்டும் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. (க-97)

# அரசியல் யாப்புக்கு மதிப்பளித்து ஜனாதிபதி நடந்து கொள்ள வேண்டும்

## ஜே.வி.பி தலைவரின் ஆவேச உரை

வாக்காளர்களின் அரசியல் யாப்பு ரீதியான உரிமைகளை மீறும் வகையில் யாரும் செயற்பட முறபட்டால் அதனைத் தோற்கடிக்கத் தயாராக வேண்டுமென ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மஹியங்கனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேரணியொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவிததார். ஒரு ஜனநாயக நாட்டில் மக்களின் உரிமைகள் அவர்களின் வாக்களிக்கும் உரிமைகள் ஒருபோதும் மீறப்படக்கூடாது. அவ்வாறு மீறப்பட்டால் அது மக்களின் சுதந்திரததைப் பாதிப்பதோடு வாக்களிக்கும் உரிமையையும் பாதிககும் என்று கூறினார்.

ஜனாதபதி இன்னும் 6 மாத காலததுக்குள பதவியிலிருந்து விலக நேரிடும். இந்த 6 மாதத்தின் பின்னரோ ஒரு வருடத்தின் பின்னரோ ஜனாதிபதி என்ன கூறப்போகின்றாா என்று எமக்குத் தெரியாது. ஓய்வுபெறுவாரா அல்லவா என்பது கூடத் தெரியாது. எவ்வாறாயினும அவரின் இந்த ஜனாதிபதித் தொழில் இல்லாமல் போய்விடும். இதுதான் நாட்டின் சட்டம். எவராக இருந்தாலும் அரசியலமைப்புச் சட்டத்துக்கு மேலாகச் செல்ல முடியாது.

ஜனாதிபதி கௌரவமான முறையில் பதவிலிருந்து விலக வேண்டிய காலம் வந்துவிட்டது. தானாகவே முடித்துக் கொள்ளவேண்டும். இல்லாவிடின் ஓடுவதற்குப் பயன்படுத்தப்பட முடியாத பழைய பஸ்களுக்கு ஏற்படும் நிலைதான் இவருக்கும ஏற்படம் என்று அவர் மேலும் கூறினாா. (து-8)

# இராணுவ தளபாட இறக்குமதிக்கு அரசாங்கம் தற்காலிகமாக தடை

பொருளாதார நெருக்கடி காரணமாக இராணுவ தளபாடங்களின் இறக்குமதிகளுக்கு அரசாங்கம் தற்காலிகத் தடையொன்றினை நடைமுறைப்படுத்த முடிவுசெய்துள்ளது.

எதிர்காலத்தில் இறக்குமதி செய்யவேண்டிய தளபாடங்கள் குறித்து நன்கு ஆராய்ந்ததன் பின்னரே இந்தத் தடையுத்தரவை நீக்குவது குறித்து ஆராயப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தனித்தனியாக ஒவ்வொரு ஆயுதப்படைகளினதும் அவசர தேவை, இராணுவ தளபாடங்களின் தாரதரத்தன்மை போன்ற விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தற்காலிக தடை குறித்து விளக்கத்துடன் திரைசேரியால் இராணுவம், கடற்படை, ஆகாயப்படை மற்றும் பொலிஸ் தரப்பினருக்கு சுற்றறிக்கைகள அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதில் முக்கியமாக கடற்படைத் தளபதியால் பரிந்துரைக்கப்பட்ட பிரித்தானியத் தயாரிப்பான படையினரை ஏற்றியிறக்கும் 36 பில்லியன் ரூபா பெறுமதியான சேர் கலகாட் என்ற கப்பலும் உள்ளடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலைக் கொள்வனவு செய்வதன் மூலம் கொழும்பிலிருந்து பெருமளவு படையினரை யாழ்ப்பாணத்துக்கு ஏற்றியிறக்க முடியும் எனக் கூறிப் படைத்தளபதி காரணம தெரிவித்திருந்தார்.

இந்தக் கப்பலானது காங்கேசன்துறை முகத்தில் நங்கூரமிடப்பட முடியாது என்பதைக் காரணம் காட்டியே கடற்படைத்தளபதியின் கருத்து நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்தக் கப்பலை இயக்குவதன் மூலம் கடற்படைக்கு பாரிய நிதிப்பிரச்சினை ஏற்படும் என்ற காரணத்தினாலேயே இந்த நிராகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சம்பந்தப்பட்ட சேர் கலகாட் கப்பலுக்கு பத்து நாட்களுக்கான எரிபொருள் செலவானது 180 மில்லியன் ரூபாய்களாகும்.

கடற்படையினரின் மாதாந்த சம்பளங்களிற்காக 400 மில்லியன் ரூபா செலவாகும் நிலையில், இந்தக் கப்பலுக்காக மாதமொன்றுக்காக 558 மில்லியன் ரூபாவினைச செலவிடுவது இயலாத காரியம் என்பதன் காரணமாகவே கடற்படைத்தளபதியின் கொளவனவுக் கட்டளை நிராகரிக்கப்பட்டதாக தெரியவருகிறது. (இ-4)

# அல் - கெய்டாவின் அடுத்த இலக்கு ஜப்பானாக இருக்கலாம்

## பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

(டோக்கியோ)

அல-கெய்டா தீவிரவாதிகள் அடுத்ததாக ஜப்பானைத் தாக்க நேரிடலாம் என்ற அச்சம ஏற்பட்டுள்ளது. அதனால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலண்டனில் அல் - கெய்டா தீவிரவாதிகள் தொடர்குண்டு வெடிப்புகளை நிகழ்த்தியதில் 50க்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். இதைத தொடர்ந்து அந்த இயக்கம் அமெரிக்காவின் கூட்டாளியான ஜப்பான் மீதும் தாக்குதல் நடத்தலாம் என்ற பீதி ஏறபட்டுள்ளது.

ஈராக்கில் ஜப்பானைச் சேர்ந்த 600 இராணுவ வீரர்கள் நிறுத்தப்பட்டு உள்ளனர். இதுதவிர, அமெரிக்க வீரர்கள் 40 ஆயிரத்து 500 பேர் ஜப்பானில் நிறுத்தப்பட்டுள்ளனர். ஈராக மீது அமெரிக்கா போர் தொடுப்பதை இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயர் போல ஆதரித்தவர் ஜப்பான் பிரதமர் கொய்சுமி.

2ஆம் உலக யுத்தத்துக்குப் பிறகு முதல் முறையாக ஒரு வெளிநாட்டுக்கு ஜப்பான் இராணுவம அனுப்பப்பட்டது இதுதான் முதல் முறை ஆகும்.

இதன் காரணமாக ஜப்பான் தான் அல் - கெய்டாவின் அடுத்த இலக்காக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. டோககியோ மெட்ரோ ரயிலில் தாக்குதல் நடத்தப்பட்டால் உயிர் இழப்பு அதிகமாக இருக்கும் எனறு நிபுணர்கள கருதுகிறார்கள்.

ஏனெனில் இங்கு மெட்ரோ ரயிலை 56 இலட்சம் பயணிகள் தினமும் பயன்படுத்துகிறார்கள். இதன்காரணமாக பஸ், ரயில் மற்றும் விமான நிலையங்களில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வெடிகுண்டுகளை வைப்பதற்கு குப்பைத் தொட்டி பயனபடுவதால் அவற்றை அகற்ற நிர்வாகம் தீர்மானித்து உள்ளது.

அமெரிக்கா இங்கிலரந்து போல ஜப்பானில் வெளிநாட்டினர் அதிக அளவில் இல்லாததாலும முஸ்லிம்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலும் தீவிரவாதிகள் உள்ளூர் மக்கள் மத்தியல் ஊடுருவுவது கடினம் என்றும் நிபுணர்கள் கூறுகிறர்கள் (க)

# அமெரிக்காவை புயல் தாக்கியது

(மினாமி)

அமெரிக்கா அருகே உள்ள ஹைத்தி, கியூபா ஆகிய நாடுகளைத் தாக்கிய டென்னிஸ் எனப்படும் புயல் வலுவடைந்து அமெரிக்காவைத் தாக்கியது. அப்போது மணிக்கு 200 கிலோ மீற்றர் வேகத்தில் காறறு வீசியது.

அமெரிக்காவில் புளோரிடா, அலபாமா, மிசிசி சிப்பி ஆகிய மாநிலங்களில் தாழ்வான பகுதிகளில் வசித்த 12 இலட்சம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில தங்கவைக்கப்பட்டனா. (க)

தொடர் குண்டுவெடிப்பில் இறந்தவர்களை நினைவு கூரும் விதத்தில லண்டன் கிங்ஸ் சர்க்கிள் கிராஸ் ரயில் நிலையம் அருகே உள்ள பூங்காவில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு ஒருவருடன் ஒருவர் கை கோர்த்து அஞ்சலி செலுத்திய காட்சி.



# ஹைத்தி மற்றும் கியூபாவை தாக்கியது பயங்கர சூறாவளி

## 55 பேர் பலி; 20000 வீடுகள் சேதம்

(ஹவானா)

ஹைத்தி தீவு மற்றும் கியூபாவை பயங்கர சூறாவளி தாக்கியதில் ஏராளமான வீடுகள், பாலங்கள் இடிந்துள்ளதுடன் இதனால் 55 பேர் உயிரிழந்துள்ளனர்.

கரிபிய்ன் கடலில் கடந்த சில நாட்களுககு முன்பு பயங்கர சூறாவளி உருவானது. இந்த சூறாவளியை புடென்னிஸ்பூ என்று நிபுணர்கள் அழைக்கிறார்கள். அது மணிக்கு 215 கிலோ மீற்றர் வேகத்தில் வீசியது.

ஹைத்தி தீவு, ஜமைக்காவைத் தாக்கிய அந்தச் சூறாவளி அங்கிருந்து நகர்ந்து சென்று கடந்த சனிக்கிழமை அதிகாலை கியூ பாவைத் தாக்கி பெரும் சேதத்தை உருவாக்கியது.

ஹைத்தி வடக்கு பகுதியில் ஒரு பாலம இடிந்து விழுந்தது. இதில் 15 பேர் இறந்தனர். மேலும் வீடுகள் இடிந்து விழுந்ததிலும, மரங்கள் முறிந்து விழுந்ததிலும் மேலும பலர் உயிரிழந்தனர். அந்த தீவில் மட்டும் 22 பேர் பலியானார்கள்.

கியூபாவில் கிரன்மா பகுதியில் இருக்கும இரு கடலோர நகரங்கள் பேரழிவைச் சந்தித்தன. 18 வயது வாலிபர்கள் உட்பட 10 பேர் இறந்தனர்.

இந்தச் சூறாவளியின் கோரத் தாணடவத்துககு ஏராளமான வீடுகள் இடிந்து தரை மட்டமாயின. 20ஆயிரம் வீடுகள் சேதம் அடைந்த தாகக் கூறப்படுகிறது.

வீதிகள் எங்கும் மரங்கள் வேரோடு சாய்ந்து கிடக்கின்றன. மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. வாகனப் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

தலைநகர் ஹவானாவும் பாதிப்புககுள்ளாகியது. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் 22 லட்சம் மக்கள் தவிக்கிறார்கள். இது பற்றி ஜனாதிபதி பிடல் காஸ்ரோ கூறுகையில்,

வடுகள் இடிந்ததால் உயர் இழப்பு ஏற்பட்டது. கடலோர 2 நகரங்கள் பெரிய பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன என்றார்.

இந்தச் சூறாவளி காரணமாக கியூபாவில் சில முக்கிய நகரங்களில் உள்ள 6 இலட்சம் பேர் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மீடபுப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

இந்தச் சூறாவளி ஹவானாவுக்கு வடகிழக்கே 15 மைல் தொலைவில் மையம் கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் உள்ள புளோரிடாவை நோக்கி அது நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனேகமாக புளோரிடாவைத் தாக்கலாம் எனத் தெரிவிக்கப் படுகிறது.

எனவே, அங்கு முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. கடலோர விடுதிகளில் தங்கியுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. தாழ்வான பகுதியில் இருப்பவர்களும வெளியேற்றப்பட்டு வருகிறார்கள். (ற)

# லண்டன் குண்டு வெடிப்பு - 3 பேர் கைது

லண்டனில் நடந்த தொடர் குண்டு வெடிப்பைப் பற்றி தீவிரமாக துப்புதுலக்கிய பொலிஸார் நேற்றுமுன்தினம் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் 3 மர்ம நபர்களைக கைது செய்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டததின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக லண்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குண்டு வெடிப்புக்கு பின் நடக்கும் முதல் கைது நடவடிக்கை இது என்பது குறிப்பிடத்தக்கது. லண்டன் குண்டுவெடிப்பில அல் - கெய்டா இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அபு மூசாப் அல் சார்கவிக்கு தொடர்பு இருக்கலாம் என இங்கிலாந்து உளவுப்படை கணித்துள்ளது.

இதனிடையே குண்டுவெடிப்பு நடந்த ரஸ்சல் சதுக்க பாதாள ரயில்நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் மேலும் சில உடல்கள் மீட்கப்படடன. இந்த உடல்களையும் சேர்த்து இதுவரை பலியானவர்கள் எண்ணிக்கை 49 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. குண்டு வெடிப்பை அடுத்து இங்கிலாந்தில் உள்ள சிறுபான்மை இன மக்கள் மீதும் குறிப்பிட்ட சில மத வழிபாட்டு தலங்கள் மீதும் 70க்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடந்ததை இங்கிலாந்து அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

லீட்ஸ் பகுதியில் ஒரு மசூதி தீவைத்துக் கொளுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (து)

WORLD NEWS உலக தரிசனம்

# இந்தோனேசியா நடுக்கடலில் பயணிகள் கப்பல் மூழ்கியது

## 200 பேர் வரை பலியாகியதாக அச்சம்

இந்தோனேசியாவில் நடுக்கடலில் பயணிகள் கப்பல் கவிழ்ந்து, அதில் பயணம் செய்த 200க்கும் மேற்பட்டவர்கள் நீரில் மூழ்கி இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இது குறித்து இந்தோனேசியாவில் இருந்து வெளிவரும் செய்தித்தாள் ஒன்று கூறியதாவது,

இந்தோனேசியாவில் கடந்த ஒரு வாரகாலமாகவே கடுமையான சீதோஷ்ண நிலை நிலவி வருகிறது. இதன் காரணமாக, தொடர்ந்து கன மழையும் பெய்து வருகிறது. பப்புவா மாகாணம் மெராவகே என்ற இடத்தில் இருந்து 'திகுல்' என்ற சிறிய பயணிகள் கப்பல் 200 பேருடன் தானா மெரா நகரை நோக்கி கடந்த வியாழனன்று புறப்பட்டுச் சென்றது.

பப்புவா மாகாணத்தில் இருந்து வடக்கே 200 மைல் தொலைவில் துறைமுக நகரான தானா மெரா உள்ளது. கப்பல் நடுக்கடலில் சென்று கொண்டிருந்த போது திடீரென்று தலைகீழாக கவிழ்ந்தது.

சம்பவம் பற்றிய தகவல் அறிந்ததும மட்புப் படையினர் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். ஒரு சிலர் மட்டும பலத்த காயத்துடன் மீட்கப்பட்டனர். எஞ்சியுளள மற்றவர்களின் நிலை என்ன ஆனது என்றே தெரியவில்லை. இவர்கள் அனைவரும் நீரில் மூழ்கி இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இப்பகுதியில் தொடர்ந்து காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்து வருவதால், மீட்புப் பணியில் சரிவர ஈடுபடமுடியவில்லை. (க)

# அரபு மொழி பேசும் ஆபிரிக்கர்களே அயோத்தியில் தாக்குதல் நடத்தினர்?

(அயோத்தி)

அயோத்தியில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் பற்றி முக்கியத் தகவல்கள் கிடைத்துள்ளன. அவர்கள் அரபு மொழி பேசும் ஆபிரிக்கர்கள் என்றும், நேபாளம் வழியாக இந்தியாவில் ஊடுருவியுள்ளனா என்றும் தெரியவந்துள்ளது.

அயோத்தியில் இராமர் கோயிலைத் தகர்க்க முயன்ற தீவிரவாதிகள் பற்றி அறிய தீவிர விசாரணை நடக்கிறது. தீவிரவாதிகளை அக்பர்பூரில் இருந்து அயோத்திக்கு காரில் அழைத்து வந்த டிரைவர் ராஜ்குமாரிடம் பொலிஸார் விசாரிக்கின்றனர். அவர் பல முக்கியத் தகவல்கள்ள வழங்கியுள்ளார்.

காரில் தீவிரவாதிகள் வந்தபோது அரபு மொழியில் பேசியுள்ளார். அது எந்த மொழி என்று ராஜ்குமாரால் கூற இயலவில்லை. அதிகாரிகள் அவர் முன் காஷ்மீர் மொழியில பேசி, இதுபோல் பேசினார்களா? எனறு கேட்டனர்.

இல்லை என்று அவர் பதில் அளித்தவர் பின், அரபு மொழியில பேசினர். அதைக் கேட்டதும். ஆமாம் இந்த மொழியில் தான் பேசினர் என்று டிரைவர் கூறினார். இதன் மூலம் தீவிரவாதிகள் அரபு மொழி பேசும் ஆபிரிக்கர்கள் என்பது தெரியவந்துள்ளது.

தீவிரவாதிகளை அடையாளம் காணபதற்கான தெளிவான ஆதாரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. தாக்குதலுக்கு முன்பே அவற்றை அவர்கள் அழித்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கொல்லப் பட்ட தீவிரவாதிகளிடம் இருந்து சிறிய அளவு (பாக்கெட் சைஸ்) குரான் எடுக்கப்பட்டது. இப்புத்தகம் டில்லியில் வெளியிடப்பட்டுள்ளது. அவர்களிடம் இருந்து கைபபற்றிய தொப்பிகள், நேபாளத்தில் வாங்கப்பட்டுள்ளன. இதன்மூலம், நேபாளம் வழியாக இந்தியாவுக்குள் அவர்கள் ஊடுருவி இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தீவிரவாதிகள் பயன்படுத்திய இரண்டு ஏ.கே.47 துப்பாக்கிகளில் டி.ஏ.கே என்று ஆங்கில எழுத்துகள் பொறிக்கப்ட்டுள்ளன. அதன் விரிவாக்கத்தை அறிய முயற்சி மேற்கொளளப்பட்டுள்ளது.

தீவிரவாதி ஒருவன் அணிந்திருந்த டிசர்ட்டின் பிராண்ட் பெயர் குஷாப் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயரில் எங்கு டிசர்ட் தயாரித்து விற்கப்படுகிறது என்பதை அறிய முயற்சிக்கப்படுகிறது.


இந்நிலையில், தீவிரவாதிகள் குறித்து முக்கிய ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக பைசாபாத் மாவட்ட எஸ்.பி அவினாஷ் சந்திரா கூறியுள்ளார்.

அயோத்தியல் நேற்றுமுன்தினம அளித்த பேட்டியில், தீவிரவாதிகள பற்றிய முக்கிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இதன் பின்னணியில் உள்ளவர்களை பிடிப்பதில் தவறு நடந்து விடக்கூடாது என்பதால், அதைப் பற்றி விவரங்களை இபபோது வெளியிட முடியாது. தீவிரவாதிகளை ராமஜென்ம பூமிக்கு ஜப்பில் அழைத்த வந்த டிரைவர் ரேகனிடம் விசாரணை நடக்கிறது.

துபாயில் ரேகன் ஒன்பது ஆண்டுகள் இருந்துள்ளார். அவருக்கு வெளிநாட்டு இந்தியருக்கான (என்.ஆர்.ஐ) வங்கிக் கணக்கும் உள்ளது. வங்கிக் கடன்மூலம் ஜீப்பை வாங்கியுள்ளார். பின், ஒரே தவணையில அதைச் செலுத்தியுள்ளார்.

இவை குறித்து விசாரணை மேற்கொணடுள்ளோம். உள ளூர் நபாகளுடன் தீவிரவாதிகளுககு தொடர்பு உள்ளதா என்றும் விசாரிக்கிறோம் என்றார். (க)

ஜப்பானின் மத்திய பகுதியில் உள்ள நாகோயோ என்ற நகரில் உள்ள ஏழு மாடிக் கட்டடத்தின் உச்சிப் பகுதியில் வித்தியாசமாகச் செய்யப்பட்ட டொல்பின் மீன் பதிக்கப்பட்டிருக்கிறது. இந்த டொல்பின் மீன் முழுவதும தங்கத்தால் செய்யப்படடது. பல வண்ண அழகுப் பொருட்களும் இந்த மீனில் பதிக்கப்பட்டிருக்கின்றன. பொது மக்கள் பார்வைக்காக இந்தத் தங்க டொல்பின் மீன் வைக்கப்பட்டுள்ளது. ஏராளமானவாகள் இதைப் பார்த்து வியந்து போனார்கள். விரைவில கட்டடத்தின் உச்சிப் பகுதியில் இந்த மீன் பதிக்கப்பட இருக்கிறது. நாகதியூட் என்ற இடத்தில் கண்காட்சி ஒன்று நடத்தப்படவிருக்கிறது. இந்தக் கண்காட்சிக்கு வருபவர்களை கவருவதற்காக தங்க டொல்பின் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கல்விப் பொதுத் தராதர (சா/த)
# மாதிரிப் பரீட்சை - 2005
## General Certificate of Examination (Ord. Level)
## Model Examination - 2005

### தமிழ்மொழியும் இலக்கியமும்

பகுதி - I நேரம்:- 1மணித்தியாலம்

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான அல்லது சரியான விடையினைத் தெரிவு செய்க.**

(01)'சேனையர் கத்தர் மன்னர் சார்ச்சியினாப்பண வெவ்வேற தலைவன்' இதில நாப்பண் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
(1)இசை (2)பெருமை (3)நாண் (4)நடு

(02)'இப்பனியிருளில் சவங்கொணர்ந்து கரவின் அழல் சுடுவது...' இதில் கரவு என்பதன் ஒத்தகருத்து
(1)களவு (2)தீ (3)கவலை (4)விரைவு

(03)'கொழுநன தந்த மனமகிழ் கறிகள் ஆய்நதார்' இதில் கொழுநன் என்பதன் எதிர்ப்பாற சொல்.
(1)கொழுநள் (2)கொழுநி (3)மனைவி (4)மகளிர்

(04)'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' மடமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
(1)புன்மை (2)புலமை (3)புதுமை (4)மேன்மை

(05)'இல்லார்க்கொன்றீதல் பண்புடையார் செயல்'. ஈதல் என்பதன் எதிர்ப்பதம்.
(1)ஏற்றல் (2)உவத்தல் (3)வள்ளல் (4)காய்தல்

(06)வாரி, வேலை, அளக்கர், பரவை என்பன குறிப்பது
(1)தொழில் (2)கடல் (3)தரை (4)செல்வம்

(07)பதினைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா
(1)மரகதவிழா (2)முத்துவிழா (3)படிகவிழா (4)வெள்ளிவிழா

(08)அக்கினி, ஆதித்தன், சந்திரன் என்பன
(1)முத்தீ (2)முத்தேவர் (3)முத்தெய்வம் (4)முச்சுடர்

(09)பல பாட்டுக்கள் ஒரு வினை கொள்ளும் செய்யுள்
(1)அங்கதம் (2)குளகம் (3)வெண்பா (4)தொடர்நிலை

(10)உரிமை கோரி கிளர்ச்சி செய்தல
(1)போராட்டம் (2)கோரிக்கை (3)பேரணி (4)சச்சரவு

(11)எள்ளின் இளங்காய்
(1)மூசு (2)பிஞ்சு (3)கௌவை (4)கச்சல்

(12)தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதப்படுவது.
(1)கதவடைப்பு (2)வேலைநிறுத்தம்
(3)பிரசாரம் (4)ஊதியம்பெறல்

(13)நிறைமொழி மாந்தர் ஆணையால் கிளந்த மறைமொழி
(1)குறள் (2)வேதம் (3)மந்திரம் (4)சபதம்

(14)பொதுநல நோக்குடன் வாழ்வோரால் உலகம் .இன்றுமியங்குகிறது. பொது நல நோக்குடைமையைக் குறிப்பிடும் அருஞ்சொற்றொடர்
(1)தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்
(2)குழை கொண்டு கோழி எறியும் வாழக்கையா
(3)கூற்றத்தைக் கையால் விளிக்கும் கொடுமறவர்
(4)கண்ணாற் கண்டதைக் கையாற் செய்பவர்.

(15)நிலையாமைப் பொருளைத் தராத உவமைத்தொடர்
(1)கூத்தாட்டவைக்குழாம் போல
(2)புன்னுனிமேல் நீர் போல
(3)மலையாடு மஞ்சு போல
(4)விழலுக்கிறைத்த நீர் போல

(16)உலகில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டிட ஐ.நா.ச. -------- செய்கிறது.
(1)தலையீடு (2)பகீரதப் பிரயத்தனம்
(3)வசதி (4)போராட்டம்

(17)ஆழிப்பேரலையால் அநாதரவறற பலருக்கும அரசசார்பற்ற நிறுவனங்கள் .............
(1)கரையேற்றின (2)கைவிரித்தன
(3)தோள்கொடுத்தன (4)கை கழுவின

(18)கண்காணிப்புக்குழுவினர் ---------------- ஆங்காங்கு பிரச்சினைகள் தலையெடுத்த வண்ணமுள்ளன.
(1)ஆற அமர இருந்தும் (2)சுற்றும் முற்றும் இருந்தும்
(3)மூலை முடுக்கிருந்தும் (4)கண்ணுங்கருத்துமாயிருந்தும்

(19)பதற்றமின்றி அமைதியுடன் செய்யும் எச்செயலும் நற்பயனைத் , தரும் எனும கருத்தமைந்த பழமொழி
(1)பதறாத காரியம் சிதறாது (2)நிறைகுடம் தளம்பாது
(3)முயற்சி திருவினையாக்கும் (4)விளையும் பயிரை முளையில் தெரியும்

(20)'பாடின்றிப் பட்டமில்லை' என்னும் பழமொழி தரும் பொருள்.
(1)பாடுபட்டால் பட்டம் ஏற்றலாம்
(2)முயற்சியிருந்தால் உயர்ச்சி இருக்கும்
(3)துன்பப்பட்டால் கிடைப்பது அரிது
(4)காற்றின்றி பட்டம் ஏறாது

(21)பின்வருவனவற்றுள் வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்கள் கொண்டமையாத சொல்.
(1)திணிவு (2)கல்வி (3)கருமை (4)முருகு

(22)வெளிநாட்டுக்காற்று தமிழ் பேசுகிறது. இவ்வாக்கியத்தில் எழுவாய்
(1)காற்று (2)வெளிநாடு (3)தமிழ் (4)இல்லை

(23)பின்வருவனவற்றுள் இடைநிலையால் காலங்காட்டி வந்தசொல்.
(1)நட்டான் (2)பாடும் (3)பெற்றாய் (4)போனேன்

(24)பின்வருவனவற்றுள் மையீற்றுப் பண்புப் பெயரைப் பகுதியாகக் கொண்டு அமையாத சொல்
(1)வானதி (2)தண்ணீர் (3)பச்சிலை (4)சேதா

(25)'நேரில் நின்று பேசுந்தெய்வம் பெற்ற தாய்' இத்தொடரில் இடம்பெறும் பெயரெச்சங்கள்
(1)தெய்வம், தாய் (2)பேசும், பெற்ற
(3)நேரில், பேசும் (4)நின்ற, பேசும்

(26)பின்வருவனவற்றுள் செயற்படுபொருள் குன்றிய வினையாகவும், குன்றாத வினையாகவும் அமையத்தக்க சொல்.
(1)பரி (2)நரி (3)விரி (4)செய்

(27)பின்வருவனவற்றுள் வினைத்தொகையாக அமைவது
(1)மண்சரிவு (2)வடகிழக்கு (3)ஆழிப்பேரலை (4)சுழல்காற்று

(28)'உளளங்கையளவுதான் எம்மிதயம் ஆதலால், வானம் போல் நமக்குப் பரந்த மனது கிடையாது' இத்தொடரில் இணைப்பிடைச்சொல்லாக அமைவது
(1)தான் (2)எ (3)ஆதலால் (4)இதயம்

(29)'இது எம் தேசமே; அழகிலும் இனிய நாடே' இதில் வரும் உம் இடைச் சொல் உணர்த்தும் பொருள்
(1)பிரிநிலை (2)எண் (3)முற்று (4)உயர்வுசிறப்பு

(30)பெயராகவும், வினையாகவும், இடையாகவும் அமையத்தக்க சொல
(1)ஓடு (2)பாடு (3)நடு (4)கூடு

***பின்வருவனவற்றுள் வழுவின்றி அமைந்த வாக்கியங்களைத் தெரிக.**

(31)(1)வான்ம் இருண்டிருக்கிறது; ஆனால் இனறு மழை பெய்யும்
(2)வானம் இருண்டிருக்கிறது; ஆனால் இன்று மழை பெய்யாது
(3)வானம் இருண்டிருக்கிறது; எனினும இன்று மழை பெய்யும
(4)வானம் இருண்டிருக்கிறது; அல்லது இன்று மழை பெய்யாது

(32)(1)பேரணியில் மாணவர் கூட்டம் அலை மோதியது
(2)கம்பர் பாடல்கள் கவிநயம் மிக்கது.
(3)பாரியும் காரியும் சிறந்த குறுநிலமன்னன்
(4)வரும் பரீட்சைக்கு இன்றே தயாராவோம்

(33)(1)கோடை காலத்தில் பருக இளநி சிறந்த பானம்
(2)கோடை காலத்தில் பருக இளனி சிறந்த பானம்
(3)கோடை காலத்தில் பருக இளநீர் சிறந்த பானம்
(4)கோடை காலத்தில் பருக இளநீர் சிறந்த பாணம்

(34)(1)அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?
(2)அழுது புரண்டாலும் மானடார் வருவரோ?
(3)அலுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?
(4)அழுது புரன்டாலும் மாண்டார் வருவரோ?

(35)பின்வருவனவற்றுள் தொடர் வாக்கியமாக அமையாதது,
(1)வானமகள் நாணி வேறு உடை பூணுகிறாள்
(2)ஆதவன் வரவை அறிந்த விண்மீன்கள் துயில் கொள்ளும்
(3)இன்னிசை பாடி வரும் இளங்காற்றிற்கு உருவமில்லை
(4)வாழ்வென்றால் போராடும் போர்க்களம்

***பினவரும் செய்யுட் பகுதியைப் படித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கான பொருத்தமான விடையினைத் தெரிக.**

உருக்கு வாளேந்திப் பகைசெற்று உலகினை
ஓம்பும் மணிமுடி மன்னவன் போல்
கருக்கு வாளேந்திக் கலியை அழித்திந்தக்
காசினியைக் காக்கும் ஞானப்பெண்ணே

(36)இச்செய்யுள் விதந்து கூறுவது
(1)வாளை (2)பெண்ணை (3)மன்னவனை (4)உலகை

(37)செய்யுளில் கவிஞர் தான கூறவந்த பொருளை விளிப்பது
(1)பெண்ணாக (2)அரசனாக (3)கலியாக (4)முடியாக

(38)கூறவந்த பொருள் உவமிக்கப்பட்டது
(1)பகை வென்று உலகு காத்த அரசனுக்கு
(2)கலி அழித்து காசினி காத்த பெண்ணுக்கு
(3)பகை செற்ற உருக்கு வாளுக்கு
(4)கலி அழித்த கருக்கு வாளுக்கு

(39)இச்செய்யுளில் எதுகைச் சொற்கள்
(1)ஓம்பும், காக்கும் (2)உலகு, காசினி
(3)உருக்கு, கருக்கு (4)மன்னவன், ஞானப்பெண்

***ஒழுங்கின்றி இருக்கும் தொடர்களை ஒழுங்காக்கி கருத்துத் தொடர்புடைய தான வைப்பு முறையைத் தெரிக.**

(40)(அ)பண்பாட்டின் அர்த்தங்கள் புரியும்
(ஆ)எங்களது தேசமெங்கும் நாதசுரம், தவில்...
(இ)வளம் சொல்லி, மீண்டும் தொடங்கி, பனைமரமாய் நெஞ்சம் நிமிரும்;
(ஈ).......பொங்கி வரும் ஓசையிலே புதிய சுகம
(உ)வசந்தத்தை வரவேற்கும் எங்களூர் வசந்தன்;
(1)ஆ, ஈ, உ, இ, அ (2)ஆ, உ, அ, ஈ, இ
(3)ஆ, உ, இ, அ, ஈ (4)ஈ, உ, அ, ஆ, இ

க.பொ.த.சாதாரண தர மாணவர்களே!
**உங்கள் வலம்புரியில் தொடர்ந்தும் பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்.**

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும் - குறள்

வலம்புரி

# புலிகள் மீது தாக்குதல் நடத்தியது அரசின் இரண்டாவது படையா?

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் விவசாயப் பண்ணைமீது இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட தாக்குதல் மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கை கைச்சாத்தானதும் நாட்டில் நல்லதோர் நிகழ்வு நடந்துள்ளதென்ற நம்பிக்கையில் இருந்த மக்களுக்கு திருகோணமலைச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியதில் ஆச்சரியமில்லை.

சமாதான காலத்தில் விடுதலைப் புலிகள் பல்வேறு தாக்குதல் சம்பவங்களுக்கு முகம்கொடுத்துள்ளார்கள். எனினும் அவர்கள் சமாதான இலக்கைப் பேணிப் பாதுகாத்து வருவது பாராட்டப்படவேண்டியதொன்றாகும்.

நெடுந்தீவுக்கடலில் விடுதலைப் புலிகளின் கப்பல் மீது நடந்த தாக்குதல் முதல், திருகோணமலையில் நேற்று முன்தினம் நடந்த தாக்குதல் வரை சமாதான காலத்தில் நடந்தவையாகும். அதிலும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கான பொறுப்பை அரசும், படைகளுமே ஏற்கவேண்டும்.

அவ்வகையில், அரச கட்டுப்பாட்டில் உள்ள திருகோணமலைப் பகுதியில் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் யார்? இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தினார்கள் எனில் அரச படைகளின் பாதுகாப்பையும் மீறி ஆயுதங்கள் எங்ஙனம் கொண்டுசெல்லப்பட்டது. அரச படைகளின் கட்டுப்பாடெனக் கூறப்படுமாயின் - அங்கிருந்த விடுதலைப் புலிகளின் பண்ணை மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனில் அதனை இராணுவமே செய்தார்கள் என ஏன் ஊகிக்கமுடியாது.

இதுபோன்ற வினாக்கள் மக்கள் மத்தியில் எழுகின்றன. இதற்கான பதிலை வழங்கும் பொறுப்பு அரச படைகளினதும் கடமையாகும். இதிலிருந்து அரசோ - படைத் தரப்போ வழுவ நினைத்தால் அதன் விளைவு யுத்தமாகவேயிருக்கும்.

சமாதானம் என்பது தனித்து விடுதலைப் புலிகளால் மட்டும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. மாறாக இந்த நாட்டில் சமாதானம் நிலவ வேண்டுமாயின் அரசினதும், படைத் தரப்பினரதும் பூரண ஒத்துழைப்பு அவசியமானதாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் விடுதலைப் புலிகள் கைச்சாத்திட்டமைக்காக தம்மீது நடக்கின்ற தாக்குல்களை அவர்கள் தொடர்ந்தும் சகித்துக்கொள்வார்கள் என நினைப்பது மடமைத்தனமாகும்.

இத்தகைய நினைப்பேதும் அரசிடம் இருக்குமாயின் அரசும் யுத்தத்தை வரவேற்கிறதென்றே பொருள் கொள்ளவேண்டும்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் நடந்த தாக்குதலில் 3 போராளிகள் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருக்கும்போது இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதை எவ்வகையிலும் அனுமதிக்கமுடியாது.

தாக்குதல்கள் நடந்தவுடன் அதற்கும், தமக்கும் தொடர்பில்லையென அறிக்கை விடுவதில் இராணுவத்தரப்புக் காட்டும் அவசரத்தை விடுதலைப் புலிகள் மீது தாக்கியவர்களைக் கண்டறிவதிலும் காட்டப்படுமாகவிருந்தால் அதனை வரவேற்கலாம்.

அதனை விடுத்து தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த விடுதலைப் புலிகளின் பண்ணை மீது தாக்குதல்கள் நடத்தியவர்களைத் தமக்கு தெரியாதென்றும், தொடர்பில்லை என்றும் படைத்தரப்பு கூறுவதானது, இலங்கையின் படைத்தரப்பில் இரண்டாம் படை ஒன்று உருவாகிவிட்டதா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# நாட்டில் அதிகரித்துவரும் படுகொலைகளை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கோரிக்கை

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளின் போராளிகள், அரசியல்துறைப் பொறுப்பாளர்கள் சுட்டுக்கொல்லப்படுவதற்கும் காயமடைவதற்கும் யார் காரணம்? புலிகளின் அரசியல்துறை அலுவலகங்கள் மீது குண்டுத்தாக்குதல் நடத்துபவர்கள் யார்? இதற்கு விடை காணாமல் இராணுவப் புலனாய்வுத் துறையினர் சுட்டுக்கொல்லப்படுவதாக இந்த சபையில் கூடி கூச்சல் போடுவதில் எத்தகைய அர்த்தமும் இல்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபையில் தெரிவித்துள்ளது.**

கொலைகளை நாங்கள் கண்டிக்கின்றோம், ஆனால் ஒரு தரப்பினரை மாத்திரம் குற்றம் சாட்டுவதை விடுத்து அவ்வாறான கொலைகளை நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சபையில் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்தது. இராணுவப் புலனாய்வுத் துறையினர் கொல்லப்படுவதைக் கண்டித்து ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் லால்காந்த சமர்ப்பித்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீது உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உரையாற்றுகையில், எந்தக் கொலையாக இருந்தாலும் அந்தக் கொலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டிக்கின்றது.ஆனால் இராணுவ புலனாய்வுத் துறையினர் பால் குடித்துக்கொண்டிருந்த பச்சைக்குழந்தை கொலை செய்யப்படுவது போன்ற பாவனையை ஜே.வி.பி. கொண்டு வருகின்றது.

புலிகளின் போராளிகளும் அரசியல்துறைப் பொறுப்பாளர்களும் கொல்லப்படுவதற்கும் காயப்படுத்தப்படுவதற்கும் யார் காரணம். இராணுவப் புலனாய்வுத் துறையினர் தான் என்று எந்தச் சிறுபிள்ளைக்கும் தெரியும். யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கொலைகளை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

புலிகளுக்கு எதிரானவர்களை உங்கள் பக்கம் வைத்துக் கொண்டு ஒற்றன் வேலை பார்ப்பதை நிறுத்துங்கள். கொலைகள் தானாக நின்று விடும் எனக் கேட்டுக்கொண்டனர்.

கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அங்கு உரையாற்றுகையில், கொலைகளை நாங்கள் கண்டிக்கின்றோம். ஆனால் புலிகளின் போராளிகளும், தமிழ்த் தேசியப் போராட்டத்திற்கு ஆதரவானவர்களும் கொலைசெய்யப்படுகின்றனர்.

அதனை இந்த அரசாங்கமோ ஜே.வி.பியோ கண்டித்ததில்லை. இராணுவப் புலனாய்வுத் துறையினர் கொல்லப்படுவதை மட்டும் பற்றிப் பேசுவதனால் கொலைகளை நிறுத்திவிட முடியாது. பத்திரிகையாளர் டி.சிவராம் கொலைசெய்யப்பட்டிருக்கின்றார். இராணுவத்தோடு சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழு ஒன்றும் அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவரின் இயக்கமும் சிவராமின் கொலைக்குக் காரணம் எனத் தெரியவந்துள்ளது. கொலையாளிகள் அரசாங்கத்தின் பக்கம் தான் இருக்கிறார்கள் எனத் தெரிவித்தார். (க-4)

# கூச்சல், குழப்பங்களுக்கு மத்தியில் நடந்த ரவூப் ஹக்கீமின் கூட்டம்

(கொழும்பு)

சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்படாமை குறித்து விழிப்பூட்டும் வகையில் மட்டக்களப்பு காத்தான்குடியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் கலந்துகொண்ட பகிரங்க பொதுக் கூட்டம் கூச்சல் மற்றும் குழப்பங்களுக்கு மத்தியில் பலத்த பாதுகாப்புடன் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் வருகைக்கும், இந்தக் கூட்டத்திற்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று முன்தினம் காத்தான்குடிப் பிரதேசத்தில் கடையடைப்பு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதோடு வீதிகளில் கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

இருப்பினும் ரவூப் ஹக்கீம் பலத்த பாதுகாப்புடன் காத்தான்குடிக்கு நேற்று முன்தினம் மாலை வருகை தந்து திட்டமிட்டபடி குறிப்பிட்ட பொதுக்கூட்டத்தை நடத்தி முடித்தார்.

இவரது வருகையை தடைசெய்யும் வகையில் பிரதான வீதியில் எதிர்ப்பாளர்களினால் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. இவர்களைப் பொலிஸார் விரட்டியடித்தனர். ஆனால் ர்வூப் ஹக்கீம் அந்த வீதி வழியாக வராமல் உள்வீதிகள் வழியாக பொலிஸ், இராணுவம், விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் கூட்ட மேடையை வந்தடைந்தார்.

மேடைக்கு முன்பாகச் சென்ற பொதுமக்கள் பொலிஸாரின் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்பே அனுமதிக்கப்பட்டனர்.

500ற்கும் குறைவானவர்களே அங்கு காணப்பட்டனர். இதனைத் தவிர ஒரு பகுதியினர் வீதி ஓரங்களில் காணப்பட்டாலும் அவர்களில் சிலர் கூக்குரல் மற்றும் கூச்சலிட்ட வண்ணம் கூட்டத்திற்கு இடையூறு விளைவித்தனர். இடையிடையே குண்டுவெடிப்புச் சத்தங்களும் கேட்டன.கூட்டம் முடிந்த பின்பு ஆகாய வேட்டுக்களைத் தீர்த்த படையினர் அங்கிருந்து பாதுகாப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளை அழைத்துச் சென்றனர். (க-4)

# நல்லூர் பிரதேச செயலக கலாசார விழாவில் கலைஞர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தினரால் நடாத்தப்பட்ட கலாசார விழா கடந்த 9,10ஆம் திகதிகளில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவைத் தலைவரும், பிரதேச செயலாளருமான திருமதி சு.தெய்வேந்திரம் தலைமை வகித்தார். முதல்நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும்,கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேலும் கலந்துகொண்டார்கள்.

இந்நிகழ்வில், இலங்கை முனி ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார்,யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ-இஸ்லாமியத் துறைத்தலைவர் அருட்தந்தை நா. பிலேந்திரன் அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து பிரதம, கௌரவ, சிறப்பு விருந்தினர்களது உரையும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், கௌரவ விருந்தினராக கலைபண்பாட்டுக் கழகப் பெறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும்,சிறப்புவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராசாவும் கலந்துகொண்டார்கள்.

இதனைத் தொடர்ந்து "கலையும் வாழ்வும்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவின் சிறப்புரையும், "எங்கே போகின்றோம்" என்ற தலைப்பில் கவியரங்கமும்,கொக்குவில் கலாபவன மாணவர்களது நடன நிகழ்வும்,நல்லூர் பிரதேச கலைஞர்களது "தாயகம்" என்ற நாடகமும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் சிறப்பாக நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நாடக,ஓவிய,கவிதை,நாதஸ்வர,தவில் கலைஞர்களை பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.(து-19)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

**எழுந்துநில். தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன் தோள் மீதே சுமந்து கொள். உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.**

சுவாமி விவேகானந்தர்

# வெளிச்சவீட்டுப் பாடசாலை திட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட பாடசாலைகளைச் சேர்ந்த பெற்றோர்களுக்கான வெளிச்சவீட்டுப் பாடசாலைத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு வெளிச்சவீட்டுப் பாடசாலையின் யாழ். கல்வி வலய வள ஆசிரியரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளுக்கு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 3 பெற்றோர்கள் வீதம் நல்லூர் கோட்டத்தில் உள்ள 39 பாடசாலைகளிலும் இருந்து 117 பெற்றோர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள். (து-19)

# ஜனாதிபதித் தேர்தலை தள்ளிப்போடுவது மக்களின் உரிமைகளை பறிக்கும் செயல்!

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் ஜனாதிபதி தேர்தலை இவ்வருடம் நவம்பர் மாதம் நடத்தாமல் அதனை அடுத்த வருடம் நடத்த நடவடிக்கை எடுத்தால் அது மக்களின் உரிமைகளை பறிக்கும் செயலாகும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பு மீண்டும் ஒன்றிணைநதாலும் தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட மாட்டாது என்று அவர் கூறியுள்ளார்.

ஆட்சியை பொறுப்பேற்றபோது வழங்கபபட்ட உறுதிமொழியை நிறைவேற்றமுடியாத நிலைமைக்கு தற்போதைய அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் சக்தி நடவடிக்கையின் 9வது நாளான நேற்று முன்தினம் பாணந்துறையில் இடம்பெற்ற பேரணியின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றங்களை கலைத்த பின்னர் 3 மாதங்களுக்குள் நாட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என உறுதிவழங்கி மக்களின் ஆணையை ஜனாதிபதி பெற்றுக்கொண்டதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த உறுதிமொழியை நிறைவேற்றாத அரசாங்கம் மக்களை பொருளாதார ரீதியில் கஷ்டத்திற்குள் வீழ்த்தியுள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

சுகாதார அமைச்சின்

# அனுமதி பெறாதவர்கள் உப்பை விற்கமுடியாது

சுகாதார அமைச்சில் பதிவு செய்து அனுமதி பெற்றுக்கொள்ளாத எவரும் உப்பை விற்பது தடை செய்யப்பட்டுள்ளது எனவும் இதற்கான தடை உத்தரவு இந்த மாதத்திற்குள் வெளியிடப்படும் எனவும் அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் எஸ்.நாகையா தொிவித்துள்ளார்.

உப்பில் அயடின் கலக்கப்படாததால பலதரப்பட்ட நோய்கள் உருவாகின்றன. அயடின் சேர்ந்த உப்பை உபயோகிப்பது அவசியம் என்பது சர்வதேச அளவில் ஏற்றுக்கொளளப்பட்டதாகும்.

இதேவேளை, அயடின் குறைபாட்டினால் ஏற்படும் நோய்களை இவ்வாண்டிற்குள் இலங்கையிலிருந்து இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் நிமால சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

சில தனியார் நிறுவன வியாபாரிகள் தரம் குறைந்த உப்பை விற்பனை செய்வதாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இவ்வாறான உற்பத்தி தடை செயயப்பட்டுள்ள போதிலும் இதனை மேலும் உறுதிப்படுத்திக்கொள்ள அமைச்சின் கீழ் பதிவு செய்து கொள்வது கட்டாயமாக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் எஸ்.நாகையா தெரிவித்துள்ளார். (க-2)

# தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படவேண்டும்

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

திருகோணமலை செல்வநாயகபுரத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவரும், இரு பொதுமகனும் படுகொலை செய்யப்பட்டுள்ளமையை யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இராணுவத்தினரின் காட்டுமிராண்டித்தனமான இச்சம்பவம் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாகும். இச்சம்பவத்திற்கு அரசே பொறுப்பேற்கவேண்டுமென பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிராயுதபாணிகளாக நின்று யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு அரசியல் பணிசெய்கின்ற விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான தாக்குதலை கடும் விசனத்துடன் தமிழ்மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதல் நடத்தியதன் மூலம் சமாதானம் தூக்கில் இடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் இவ்வாறான சம்பவங்களை படைகளாலும், அவர்களால் ஊக்குவிக்கப்படும் குழுக்களாலும் மேற்கொள்ளப் பட்டுவருகின்றது.

இதனை அரசு வெறுமனே பார்த்துக்கொண்டு நிற்கின்றது. சமாதானத்தின் மீது அரசுக்கு விருப்பமில்லாததையே இது எடுத்துக் காட்டுகிறது.

வடக்குக் கிழக்கு தமிழர் தாயகமாகும். எமது மண்ணில் தமிழ்மக்கள் சுதந்திரமாக, சந்தோசமாக வாழவேண்டுமென்றால் தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து சிங்களப் படைகள் அகற்றப்படவேண்டும். இதுஒன்றுதான் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதற்கான ஓரேவழியாகும்.

செல்வநாயக்புரத்தில் இராணுவத் தாக்குதலின்போது கடற்புலிப் போராளி லெப்.கேணல் டிக்கன், போராளி இளம்புலி, மற்றும் பொதுமகன் இருவருக்கும் எமது வீரவணக்கத்தை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் 'செப்ரம்பர் 8' இல் வெளியாகும்?

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை செப்ரம்பர் மாதம் 8 ஆம் திகதியளவில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் பூர்த்திசெய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஆகஸ்ட் மாதம் 2 ஆம் வாரத்தில் நடனம்; சங்கீதம், மனைப் பொருளியல், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் நடைபெறும். இந்தப் பாடங்களுக்கான எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்தோர் மாத்திரமே செயல்முறைப் பரீட்சைக்கு அழைக்கப் படுவரார்கள்.

செயல்முறை மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆகஸ்ட் மாதம் மூன்றாம் வாரத்துக்குள் பூர்த்தி செய்யப்படும்.

ஆகஸ்ட் மாத இறுதிக்குள் சகல விண்ணப்பதாரிகளதும் பெறுபேறுகளை கணினி மயப்படுத்தி அவற்றை வெளியிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (க-8,9)

# புலிகளின் கோரிக்கைக்கு...

காலக்கெடுவுக்கான அரசின் பதில் கடிதத்தை நேற்றைய சந்திப்பின் போது கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஊடாக விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கும்படி கையளித்துள்ளார்.

புலிகளின் உறுப்பினர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியூடாக பயணிக்கத் தேவையான நடைமுறைகள் அக்கடிதத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இராணுவப் பாதுகாப்புடனான விடுதலைப் புலிகளின் பிரயாணம், கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்புக்கும், கிளிநொச்சியிலிருந்து திருகோணமலைக்கும் மாதமொருமுறை குறிப்பிடப்பட்ட நிபந்தனையின் கீழ் தொடர்ந்தும் வழங்கப்படும்.

இராணுவப் பாதுகாப்புடன் விடுதலைப் புலிக்ள் பிரயாணிக்கும்போது அவ் வாகனங்களில் யுத்தநிறுத்தக் காணிகாணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் பிரசன்னமாகி இருப்பர் என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 30 ஆம் திகதி வெலிகந்தப் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலுக்கும், அரச படையினருக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென தெரிவித்துள்ள அரச சமாதான செயலகம், புலிகளின் பிரயாணத்திற்கு இராணுவப் பாதுகாப்பு வழங்குவது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் கீழுள்ள உரிமையல்ல என்றும், அதுவொரு நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையே என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் அரசின் இப்பதில் கடிதத்தை விடுதலைப் புலிகள் முழுமையாக ஏற்றுக்கொள்வார்களா? இல்லையா? என்பதை இன்னும் ஓரிரு நாட்களில் தெரியவரும் எனக் கூறப்படுகிறது.

அத்துடன் அரசு கையளித்துள்ள பதில் கடிதத்தை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்காக யுத்தநிறுத்தீக் கண்காணிப்புக்குழுத் தலைவர் இவ்வார இறுதியில் வன்னி செல்லவுள்ளார்.

இதேவேளை ஜூன் 26 ஆம் திகதி 40 விடுதலைப்புலி வீரர்களை ஏற்றிக்கொண்டு பயணித்த வாகனத்தின் மீது நடத்தப்பட்ட திட்டமிட்ட தாக்குலுக்கு இராணுவத்தின் ஒத்துழைப்பு நிருபிக்கப்பட்ட நிலையில் இதற்கு சரியான தீர்வொன்றை அரசு அறிவிக்க 14 நாள் காலக்கெடுவை விடுதலைப் புலிகள் அறிவித்திருநதமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

# போராளிகளும் மக்களும்...

அனுமதிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் நடாத்தப்பட்ட முறை மற்றும் சம்பவ இடம் ஆகியவற்றை வைத்துப் பார்க்கும்போது இராணுவத்திற்குத் தெரிந்திருக்காமல் இச்சம்பவம் இடம்பெற வாய்ப்பேதும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் அவர்களுடனிணைந்தியங்கும் துணை ஆயுதக் குழுக்களுமே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளன. போர்நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முற்றிலும் முரணாக, அத்தனை மீறும் வகையிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

எமது போராளிகளும் மக்களும் தொடர்ந்தும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொல்லப்படுவதையும், காயப்படுத்தப் படுவதையும், அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுவதையும் நாமோ எமது மக்களோ தொடர்ந்தும் பார்த்துக்கொண்டு பொறுமைகாப்பது சாத்தியமற்றது. போர்நிறுத்த சூழலைக்குலைத்து, போர்நிறுத்த உடன்பாட்டை முடித்துக்கொண்டு மீண்டும் ஓர் போர்ச்சூழலை எமது தேசத்தின் மீது திணிப்பதற்கான முழுமையான முயற்சிகளையே இலங்கை அரசும் படைத்தரப்பும் எடுக்க முயல்கின்றதோ எனத் தோன்றுகிறது.

இந்த உண்மைகளைப் புரிந்துகொண்டு. இக்கட்டத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தீர்க்கமானதும் உறுதியானதுமான முடிவுகளை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

### தமிழகப்பயணம்

இன்று தமிழகப் பயணம் வெளிவரவில்லை. நாளையே மீண்டும் வெளிவரும். (ஆ-ர்)


நிறைஞ்சனாஸ் சினிமா
சங்கானை
ரஜனி, கௌதமி நடித்த
தர்மதுரை
காட்சி நேரம்: 11.00, 2.45 06.00 (பு.நே)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்.
சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த
6'2"
காட்சி நேரம்: (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
வெகுவிரைவில்
அர்ஜுன், சினேகா நடித்த
சின்னா

மனோகரா
யாழ்ப்பாணம்
ஷங்கரின் இயக்கத்தில்
சியான் விக்ரம்.சதா. விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்
அந்நியன்

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30
இசை: ஹரீஸ் ஜெயராஜ்

நியூ சிற்றி ரேடேர்ஸ்
எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவித மான றேடியோக்களும் மற்றும் கிறைண்டர்கள், மணிக்கூடுகள், மின்சார உபகர ணங்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
மேல்மாடி இல. 135/1 கஸ்தூரியார் வீதி,
(குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்
(C-அ-1348)
T.P: 021 222 3226


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.